
குப்பிழான்
ஐ. சண்முகன்


# பிரபஞ்ச சுருதி

கவிதை நூல்



# பிரபஞ்ச சுருதி

குப்பிழான் ஐ. சண்முகன்



இளமைப் பருவத்து

எங்கள் படைப்புந்துதல்களிற்கு

இலங்கை வானொலி இளைஞர் மன்றத்திலும்

வெளியிலும்

களம் அமைத்துக் கொடுத்து,

உற்சாகப்படுத்தி - ஊக்கப்படுத்திய

மதிப்பிற்குரிய

**அமரர் வ. இராசையா மாஸ்ரருக்கு**

*வணக்கத்துடன்*

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | "பிரபஞ்ச சுருதி" |
| வகை | : | கவிதை |
| படைப்பாளர் | : | குப்பிழான் ஐ. சண்முகன் |
| உரிமை | : | படைப்பாளருக்கு |
| பதிப்பு | : | 2014, ஐப்பசி |
| பக்கங்கள் | : | X + 62 |
| வெளியீடு | : | **"சித்தம் அழகியார்"**<br>ஞானாலயம், 117, விநாயக முதலியார் வீதி, பருத்தித்துறை. |
| அச்சிட்டோர் | : | கரிகணன் (தனியார்) நிறுவனம்,<br>இல.681, காங்கேசன்துறை வீதி,<br>யாழ்ப்பாணம். |

அட்டை ஓவியமும் வடிவமைப்பும் : திரு. பா. அகிலன்

| | | |
|---|---|---|
| விலை | : | ரூ. 200.00 |
| ISBN | : | 978-955-7650-00-5 |

# என் உள்ளத்திலிருந்து.....

நான் கொஞ்சமும் எதிர்பார்த்திருக்காத தருணத்தில், இக் கவிதைத் தொகுப்பு உருப்பெற்று வெளிவருகிறது. புத்திளமைப் பருவத்தில் நெஞ்சில் கிளர்ந்த உணர்வுகள், அவ்வப் போதுகளில் 'கவிதைகளாகி' சில வெளிக்களம் கண்டன. சில பதிவுகளாகவே புதைந்து கிடந்தன. வெளிக்களம் கண்ட வற்றிலும் சில அச்சுவாகனமேறின, சில வானோசையாகிக் காற்றில் கலந்து மறைந்தன.

இப்படிச் சேகரமான ஐம்பது, அறுபது கவிதைகளில் தேர்ந்தெடுத்த 30 கவிதைகள், இப்போது **'பிரபஞ்ச சுருதி'** என்ற தொகுப்பாகி உங்கள் கரங்களில் தவழ்கின்றது. இவற்றில் புத்திளம் பருவத்திற்கே உரித்தான சில குறைபாடுகள் இருந்தாலும், சில வசீகரங்களும், சில தரிசனங்களும், சில அபூர்வமான சொற் சேர்க்கைகளும், இன்னும் பலவும் உங்களை மகிழ்ச்சிப் படுத்தலாம்.

இத் தொகுப்பின் உருவாக்கத்திற்காக முழு ஈடுபாட்டுடனும், அர்ப்பணிப்புடனும் முழு மூச்சாய் உழைத்தவர்கள் துடிப்பான, விழிப்பான இளைஞர்கள், கமல சுதர்சனும், சி. சித்திராதரனும். பல நண்பர்களின் ஆத் மார்த்தமான அமைப்பான **'சித்தம் அழகியார்'** சார்பான முதலாவது வெளியீடாக இத் தொகுப்பைக் கொண்டுவர விரும்பினார்கள். அவர்களது எல்லா முயற்சிகளும் வெற்றிபெற வாழ்த்துகிறேன். அவர்களது முயற்சி களுக்குப் பின்புலமாய் நின்று ஆதரவு வழங்குகின்ற ஞானாலயம் நண்பர் து. குலசிங்கம் அவர்களுக்கு எனது நன்றிகள். நூலுக்கான அழகான முகப்போவியத்துடன் நேர்த்தியான வடிவமைப்பையும் செய்துதவிய திரு. பா. அகிலனுக்கும் நூல் பற்றிய பெறுமதியான குறிப்புகளை அளித்துதவிய சகோதரி திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசத்திற்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். எனது கவிதைகளில் எப்போதும் ஈர்ப்புக் கொண்டு, அவற்றை தொகுப்பாக் வெளியிட பலமுறை என்னைத் தொடர்பு கொண்ட, எனது கிராமத்தவர் - மூத்தவர், அகில இலங்கைப் பொதுப்பணி மன்ற அமைப்பாளர், அண்ணர் திரு. க.பொ. நடனசிகா மணியையும் இச் சந்தர்ப்பத்தில் நினைவில் கொள்கிறேன்.

நன்றிகளுடன்

**குப்பிழான் ஐ. சண்முகன்**

**23.07.2014**

**மாணிக்க வளவு,**

**கரணவாய் தெற்கு, கரவெட்டி.**

## அற்றைக் காலத்தின் .....

'பிரபஞ்ச சுருதி' கவிதைத் தொகுப்பிற்கு அணிந்துரையைக் கோரி திரு. கமலசுதர்சனும் திரு. சித்திராதரனும் என்னை அணுகிய போது 'கவிதைத் தொகுப்பிற்கு ஏன் என்னிடம் அணிந்துரை கேட்கிறார்கள்?' என்ற வினா என்னுள் முளை விட்டது. இக் கவிதைத் தொகுப்பு இளைஞர் மன்ற அண்ணா திரு. இராசையா அவர்களுக்குச் சமர்ப்பணம் செய்யப்படுகின்றது. மன்றத்தில் சமகாலத்தில் தன்னுடன் எழுதியவர்களிடம் அணிந்துரை பெற நூலின் ஆக்க கர்த்தா விரும்புகிறார் என அவர்கள விளக்கம் தந்த பின்னரே எனக்கு அதன் காரணம் தெளிவாகியது.

கவிதைத் தொகுதியைப் புரட்டி உள்நுழைந்தபோதுதான் அதில் தொகுக்கப்பட்ட முப்பது கவிதைகளும் **1965-1975** காலப் பகுதியில் எழுதப்பட்டவை என்பதைக் கண்டுகொண்டேன். அது 'இளைஞர் மன்றம்' எம்மை உருவாக்கிக் கொண்டிருந்த காலம்.

'புத்திளமைப் பருவத்தில் நெஞ்சில் கிளர்ந்த உணர்வுகள் அவ்வப்போதுகளில் கவிதைகளாகி....' என சகோதரர் சண்முகன் தன் கவிதைகளின் ஜனனம் பற்றி இந்நூலில் குறிப்பிடுகின்றார். வாழ்க் கையில் அந்த அந்தப் பருவங்களில் கிளரும் உணர்வுகள், ஏற்படும் அனுபவங்கள், சூழ இருப்பவர்களதும் சுற்றாடலில் நடைபெறு பவைகளதும் மனப்பதிவுகள் என்னும் இன்னோரன்ன பலவும் ஆக்ககர்த்தாவின் ஆக்கங்களில் தாக்கம் செலுத்துவது வழமை. அதே போன்று வெவ்வேறு காலகட்டங்களின் வசன நடை, கவிதை வடிவம் என்பனவும், வேறுபட்டிருப்பதைக் காணலாம். சங்ககாலச் செய்யுள் முதல் இன்றைய கவிதைகள் வரை சுவைத்துப் பார்த்தால் காலத்திற்குக் காலம் அவை உருமாறிக் கொண்டிருப்பதைக் காணலாம்.

இத் தொகுப்பிலுள்ள ' இனிது இனிது இளமை இனிது' என்ற கவிதையில்

இனிது இனிது இளமை இனிது
உலக வாழ்வில் உயரும் எண்ணம்
உய்யும் வழியில் போகும் வேகம்
சகல கலையில் கல்வி தொழிலில்
சாரும் காதல் தவிப்பு மோதல்

............................................................

கொடுமை போக்கும் கொள்கை நோக்கு
மிடியைத் தீர்த்து மிஞ்சு முழைப்பு
கடமை வேட்கை கண்ணிய வாழ்க்கை
அடிமைத் தனத்தில் அடங்கா வெறுப்பு

என கவிஞர் பாடிச் செல்கிறார். இவைதான் அவரது கவிதைகளில் பாடு பொருளாகப் பரிணமித்துள்ளன.

பாடவந்ததை நாம் சொல்வது போல் கவிஞன் கூறமாட்டான். அந்திப்போதில் கடற்கரையில் நின்று செவ்வானத்தை நாமும் இரசித்திருக்கின்றோம். ஆனால் இதே காட்சியைக் கண்ட சண் முகனுக்கோ கடலும் வானும் கதை பேசுவது கேட்டிருக்கிறது. 'காவி ஏன் கட்ட வேண்டும்?' என்ற கவிதையில் அவை உரையாடியவற்றை நீங்களும் கேட்டுப் பார்க்கலாம். கேட்டு கடல் கூறும் அறிவுரை களையும் மனதிலிருத்திக் கொள்ளுங்கள். அதே போல் 1968 இல் கவிஞர் கண்ட 'அழகு வாய்ந்த யாழ்ப்பாண' த்தில் ஒரு சுற்றுலா போய்ப்பாருங்கள்.

அழகும் அழகும் சேர்ந்ததொரு
அழகு வாய்ந்தது யாழ்ப்பாணம்

என்று அவர் அந்தக் கவிதையை நிறைவு செய்கின்றார். அந்த அழகை இரசிக்கும் போதில் 1998 காலப்பகுதியில் வாழ்ந்த ஓர் இளைஞரால் யாழ்.குடாநாட்டைப் பார்த்து, இப்படிப் பாடி மகிழ முடியாத துரதிர்ஷ்டத்தின் நினைவும் கூடவே எழுந்து மனதை இடிக்கிறது.

*அவரும் மகிழ்வின் உச்சத்திலே எல்லாக் கவிதைகளையும் பாடியுள்ளாரென்று கூறமுடியாது. ஒரு சோகக் கவிதையும் இதில் இடம் பிடித்திருக்கிறது. கவிதையால் காட்சிகளைக் கண்முன் மிதக்கவிடும் கவிஞரின் திறமைக்குச் சான்றாக அதிலிருந்து சிலவரிகள்.*

பக்கத்து வீட்டு
பார்வதி மச்சாள் என்னை, இச்சித்து பின்பு
அடித்து, இடித்து, கிள்ளி, பென்னம்பெரு
விரலை மடக்கி ஒருக்குளித்து உன்னுடனே
கோபம்; கதையாதே என்கின்ற போதினிலும்
எண்ணி எண்ணி அழுதேன்; நான் ஏங்கி ஏங்கி அழுதேன்.

*சின்னஞ்சிறு பார்வதி மச்சாள் இப்பொழுது உங்களுக்கும் கோபம் போட்டுக் காட்டுகிறாளா?*

*சகோதரர் சண்முகன் இத்தொகுப்பில்*

சோலை என்பது வாழ்வில் இல்லையோ
சோகந்தான் இவ்வாழ்வின் எச்சமோ

வாழ்க்கை என்பது கனவின் தொகுதிகள்
வழி முழுவதும் நீண்ட மூச்சுக்கள்
வாழ்க்கை என்பது நினைவின் அழிப்புகள்
நிறைவேறாத மனதின் உளைச்சல்கள்
வாழ்க்கை என்பது உடலின் உணர்ச்சிகள்
வாய் வயிற்றின் இடையறா முயற்சிகள்
வாழ்க்கை என்பது சலிப்பின் சிதறல்கள்
முதலும் முடிவும் மூச்சின் முனங்கல்கள்

*என்று நீண்ட மூச்சு விடுகின்றார்.*

*'வாழ்க்கை' யில்*

இருளும் ஒளியும் சுழலும் நாட்கள்
இன்பும் துன்பும் கலந்த வாழ்க்கை
எதிரும் புதிரும் கலந்த வாழ்வு

எனத் தத்துவம் பேசுகின்றார், இயற்கையின் எழிலை, இலக்கிய நயத்தை, சோகச் சுவையை, வாழ்க்கைத் தத்துவத்தை என்று பல வற்றையும் அவற்றிற்கேற்ற சந்தக் கவிதைகளாக்கித் தந்துள்ளார் குப்பிழான் ஐ. சண்முகன். நயப்பதற்கு மேலும் நிறைய உண்டு. எழுதின் நீளும், நீங்களே சுவைத்தறிந்து கொள்ளுங்கள். உங்களை விட வேறுபட்ட மனநிலையில் தான் நான் இக்கவிதைகளை இரசித்தேன். அதனால்...

இறுதியாக நன்றியொன்று கூற மனம் விரும்புகிறது. இளைஞர் மன்றத்தில் அறுபதுகளில் பிற்பகுதியில் நானும் எழுதிக்கொண்டிருந் தேன். அப்போது நல்லதோர் படைப்பாளியாக குப்பிளான் ஐ. சண்முகன் திகழ்ந்தார். அக்காலத்தில் இராசையா அண்ணாவின் வழிகாட்டலில் எழுத்தாளர்களாக மட்டுமன்றி, நடிகர்களாக, விவாத மேடையில் பேச்சாளர்களாக அறிவிப்பாளர்களாக பலர் உருவாகிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் இன்று பல்வேறு துறைகளில் முன்னிலையில் திகழ்கின்றார்கள். ஊடகங்களில் அவர்கள் குறித்து வரும் போது அற்றை நாள் நினைவுகள் ஒரு கணம் மேலெழுந்து அமிழ்ந்துவிடும். சமகால எழுத்தாளர்களின் நூல்கள் சிலவற்றையும் வாசித்திருக்கிறேன். அவை மன்ற காலத்தை நினைவூட்டியதில்லை.

யாழ் இலக்கிய நண்பர் கழகத்தில் நானும் அங்கத்தவராக இருந்தேன். நான் கூட்டங்களுக்குச் செல்வது அரிதாயிருந்தபோதும் இரசிகமணி ஐயாவுக்கு நடத்திய பாராட்டு விழாவில் பங்கு கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது ஒரு மறக்கவியலாத நிகழ்வு. பேராதனை முருகனுக்கு எழுதிய ஆற்றுப்படை எனக்கும் நினை விற்கு வருகிறது. இப்படி இந்த நூல் அறுபதுகளின் இறுதிக்காலப் பகுதிக்கு என்னையும் இழுத்துச் சென்று ஒரு வித்தியாசமான அநுபவ அருவியுள் என்னைத் தோய வைத்து புத்துணர்வொன்றை ஊட்டியது. இதற்காக சகோதரர் சண்முகனுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

'மயூரம்', பருத்தித்துறை வீதி.
கோப்பாய்.

**திருமதி. யோகேஸ்வரி சிவப்பிரகாசம்**

# உள்ளே....


| | | |
|---|---|---|
| 01. | கலைக்கோதை | 01 |
| 02. | கண்ணன் | 02 |
| 03. | கம்பன் படைத்த இலக்கியம் | 03 |
| 04. | கவிதை பிறந்த கதை | 05 |
| 05. | துயில் | 07 |
| 06. | பாரதியார் | 09 |
| 07. | பூம்புகாரில் ஒருநாள் | 12 |
| 08. | செந்தியரை வாழ்த்துகின்றோம் | 17 |
| 09. | தாதியாம் தெய்வமகள் | 19 |
| 10. | இனிது, இனிது, இளமை இனிது | 21 |
| 11. | நேயக் கன்னி | 22 |
| 12. | நெஞ்சிலே தைத்த நெருஞ்சி | 23 |
| 13. | ஒரு சோகக் கவிதை | 25 |
| 14. | மாலை | 29 |
| 15. | காவியேன் கட்ட வேண்டும்? | 31 |
| 16. | அழகு வாய்ந்த யாழ்ப்பாணம் | 33 |
| 17. | பொங்கிடும் மங்களம் | 35 |
| 18. | வள்ளுவம் | 37 |
| 19. | வேலை தேடும் வேலை | 39 |
| 20. | இன்றைய ஈழத்தில் பாரதி இருந்தால் | 40 |
| 21. | போராதனை முருகன் ஆற்றுப் படை | 44 |
| 22. | நீண்ட மூச்சு | 47 |
| 23. | காதல் தத்துவம் | 49 |
| 24. | வாழ்க்கை | 50 |
| 25. | அணுவில் ஓர் உலகம் | 51 |
| 26. | கூத்து | 53 |
| 27. | பிரபஞ்ச சுருதி | 54 |
| 28. | வீர வியட்னாமிற்கு... | 55 |
| 29. | நெல்லு விளைந்ததடி | 57 |
| 30. | சிறுசுகளின் பிரகடனம் | 60 |

# கலைக் கோதை

1. கன்னிக் கவிதை கொணர்ந்து தந்தாள் - கலைக்
   காதை பலவுமே சொல்லிச் சென்றாள்
   எண்ணி எண்ணி யிங்கே ஏங்குகின்றேன் - எழிற்
   கோலத்தைக் காட்டி மறைந்து விட்டாள்.

2. நெஞ்சக் கமலத்தில் நிறைவுறவே நின்று - நிர்
   மல மாகவே புன்ன கைத்தாள்;
   வஞ்சியெனை யிங்கே வஞ்சிக்காதே யென்று - வண்ணத்
   தமிழில் நான் கெஞ்சி நின்றேன்.

3. நல்லவர் நாவையே நாடி நிற்பாள் - நலந்
   தன்னை என்நாவில் குடியாய் வைத்தாள்;
   வல்லவளே என்னை வாட்டிடாதேயென்று - வருந்தி
   அழுதே நான் வேண்டு கின்றேன்.

4. கீதமாய் காதில் இனித் திடுவாள் - கிளிப்
   பிள்ளைக்குமே அருள் புரிந்திடுவாள்;
   நாதமாய் அவளை நான் காணுகின்றேன் - நங்கை
   பாதத்தைப் பற்றவே பாடுகின்றேன்.

5. பார்க்கு மிடங்களில் பரவச மான - பல்
   வண்ணத்திலே அவள் தேங்கி நிற்பாள்;
   நோக்கும் விழியின் அசைப்புடனே - நேய
   மங்கையைக் காணாது வாடுகின்றேன்.

6. பூவில் மணமாய் நிறைந்து நிற்பாள் - புகழ்
   பாவில் உயிராய் உறைந்திருப்பாள்;
   கோவில் இதயத்தில் ஆக்கி விட்டு - கலைக்
   கோதை அருளை நான் நாடுகின்றேன்.

*இலங்கை வானொலி இளைஞர் மன்றம் 11.02.1966*
*ஞானச்சுடர்*

# கண்ணன்

1. கண்ணனை என்ற பெயருள்ளோன்;
   கடம்ப வனத்தே திரிந்திடுவான்
   வெண்ணெய் திருடித் தின்றிடுவான்
   வேண்டும் போது அருள் தருவான்.

2. துள்ளித் திரியும் கடலலையில்
   துயரைத் தீர்க்கும் நடம்புரிவான்
   அள்ளி அணைக்க நான் சென்றால்;
   அப்பால் சென்று முறுவலிப்பான்.

3. தீபச் சுடரின் இயக்கமதில்
   சிந்தை தன்னைக் காட்டிடுவான்
   பாவச் செயல்கள் நான் புரிந்தால்,
   பண்பை எடுத்தே ஓதிடுவான்.

4. கண்ணாவென்று நான் அழைத்தால்
   கவிதை கொண்டே தந்திடுவான்
   பண்ணால் பாடிப் பரவசித்தால்
   பஞ்சம் நீக்கி அருள்புரிவான்.

5. பக்தி மயக்கில் நானவனின்
   பாத மலரைத் தொட்டிடுவேன்
   கட்டி யணைத்தே அருள்செய்தென்
   கவலை தன்னை அழித்திடுவான்.

6. கண்ணன் அவனை நினைந்துருகி
   காலம் எல்லாம் கழித்துவிட்டால்
   பின்னை அவன்தன் பேரருளில்
   பிணைந்தே இன்பம் துய்த்திடலாம்.

1966

# கம்பன் படைத்த இலக்கியம்

கம்பன் படைத்த இலக்கியம் - அது
கவிதையிலே ஒரு பொக்கிஷம்;
இன்பத்தை நல்கிடும் இலக்கியம் - இவ்
உலகத்தில் வாழ்ந்திடும் நித்தியம்.

பண்டைத் தமிழன் பலமுண்டு - அதில்
பாரத நாட்டினற் குணமுண்டு;
சிந்தையில் ஒழுக்கத்தைப் புகுத்திடும் - நல்ல
தீந்தமிழ் காவியம் உணர்ந்திடு.

துன்பிற்கு வித்திட்டாள் கைகேயி - அவள்
துயரத்தை வருவித்தாள் விதியாகி;
அன்பிற்கு ஆளாகி இறந்திட்டான் - அந்த
அரசர்க்கு அரசனாம் தசரதன்.

குணத்தினில் மிக்க அவ் இராகவன் - அவன்
குணத்திற்கு நேரெதிர் இராவணன்;
போரினில் ஆயுதம் இழந்திட்டான் - அவனை
இன்றுபோய் நாளைவா என்றனன்.

வீரத்தின் இருப்பிடம் இராவணன் - அவன்
காமத்தால் அழிந்திட்டான் வீணவன்;
பாவத்திற் கஞ்சாத பாவிகள் - பல
ஆயிரம் அரக்கர்கள் மாண்டார்கள்.

இரண்டகம் செய்திடும் வஞ்சர்க்கு - நல்ல
இலக்கினைக் காட்டிடும் விஞ்சற்கு
கும்பகர்ணன் என்றோர் குரலுண்டு - அது
குணத்தினைச் செப்பிடும் பொருளின்று.

சிந்தையை உருக்கிடும் சீதையும் - அவள்
சிறப்பிற்கு போராடும் பாதையும்
பெண்களுக்கே ஒரு நல்வழி - அதைப்
பேணுதல் உலகிற்கு உய்வழி.

உலகிற்கு உறுதியைத் தந்திடும் - அது
உணர்வுக்கு கிளர்ச்சியை அளித்திடும்
பாருக்குப் பண்பினைக் கூறிடும் - வல்ல
பாவலன் படைத்த இலக்கியம்.

*1965*

# கவிதை பிறந்த கதை

மாலை நேரக் காற்றிலே
    மயக்கம் கொண்டே நானுமோர்
வாழைச் சோலை தன்னிலே
    வதங்கி வாடி இருந்தேனே;

இன்பம் என்று ஒன்றுண்டோ
    இதயம் தவியாய்த் தவித்தது;
துன்பம் துன்பம் துன்பமேயென்
    துயர நெஞ்சம் சொன்னது.

காக்கைக் குருவி கரைந்தது
கரிய இருளும் வந்தது
பார்க்கு மிடங்கள் எங்கணும்
பயங் கரமே தெரிந்தது.

தூர நின்ற மரங்களும்
துன்பச் சுமையால் அழுதன
கவலை கொண்ட வானமும்
கண்ணீர் தன்னை உகுந்தது.

பழமை யான கிணற்றிலே
பலத்த தொனிகள் கேட்டன
வழமை யான குரலிலே
வார்த்தை பல்லி சொன்னது

அந்தி நேரம் வந்தது
ஆலய மணி ஒலித்தது
சாந்தி நெஞ்சில் பிறந்தது
சக்தி உடலில் செறிந்தது.

துன்பம் எங்கு சென்றதோ
தூய இன்பம் சுரந்தது
அன்பர்க் கருளும் அண்ணலால்
அழியாக் கவிதை பிறந்தது.

*1966*

# துயில்

மங்கையவள் மன்னுலகில் எங்குமுள்ளாள்
மாதவளின் மலர்க்கரத்தின் அணைப்புக்காக
பங்கயத்தில் பாலகனைத் தோற்றுவித்த
பார் புகழும்கண்ணனுமே ஏங்குகின்றான்
இங்கு அவள் இதயமதில் இரக்கமின்றேல்
இவ்வுலகில் எவ்வுயிரும் வாழாதம்மா
பொங்கு மெழில்மன்னுபுகழ் பெருமையொன்றும்
பேதையவட்கில்லையந்தோ பாவமம்மா!

என்னுடைய இணையில்லாத் தோழிபோல
எப்போதும் எனைத் தொடர்ந்து வந்தே நிற்பாள்
பெண்ணேயுன் பேதமைதான் என்னே என்பேன்
பேசாமல் எனைத் தழுவி அணைக்க அன்னாள்
முன்னேறும் போதுநான் மூர்க்கனாகி
மூதேவி அப்பாலே போ என்றாலும்
கண்ணாலே மொழிபேசிக் கருத்தையீர்த்து
காரியத்தைச் சாதிக்கக் காத்தே நிற்பாள்.

அன்றாட வேலைகளின் அலுப்பைத் தீர்க்க
அன்புடனே அவளைநான் அழைத்திட்டாலும்
பொன்றாத புகழ்மாலை போற்றிச் சூடி
பொன்னேயென் கண்ணேயென் றோதிட்டாலும்
மன்றாடி மங்கையவள் மனதைமாற்ற
மன்னிப்பாய் என்னைஎன்றே கூறிட்டாலும்
நன்றாகத் தவியென்றே செப்புமாற்போல்
நங்கையவள் நழுவிடுவாள் நானும் சோர்வேன்.

அன்னவளின் அணைப்பினிலே அறிவுகெட்டு
ஆழ்ந்திருக்கும் போதினிலே உறுசுகத்தை
என்னமொழி கொண்டிங்கு நானுஞ் சொல்வேன்;
ஏறுமந்த எல்லையில்லா இன்பமம்மா!
கன்னல் மொழிக் கன்னியல்ல இத்தனைக்கும்
கருத்தினையே கவர்ந்துவிட்ட கள்ளியல்ல
என்னவளாய் அவளென்றும் இருந்ததில்லை
எல்லோர்க்கும் பொதுமகளாம் துயிலவள்பேர்.

*இலங்கை வானொலி இளைஞர் மன்றம் 1966*
*விவேகி 1.10.1968*

# பாரதி..... யார்?

சிங்கேறு போன்ற நடையுடையான் - நற்
சிந்தனைச் செல்வனாய் வாழ்ந்திருந்தான்
மங்காத புன்னகை கொண்டிருந்தான் - மதி
யில்லாதோர் வாழ்வையே சாடிநின்றான்
அன்பாக யாரையும் ஆதரித்தான் - அருட்
பாங்கான கவிதையும் இயற்றிடுவான்;
பண்பாக வாழ்வோரைப் போற்றிடுவான் - பழி
செய்வோரை நல்லாய்த் தூற்றிடுவான்.

வீரசுதந்திரம் வேண்டி நின்றான் - விண்
ஏகும் செயலையும் பாடிச்சென்றான்
சூரராய் மக்களை மாற்றிடுவான் - தூர
தேசத்தார் ஆட்சியை ஆட்டிடுவான்;
பாரத மாதாவென் றோதிடுவான் - பாச
சக்தியை அதனாலே தோற்றிடுவான்;
வீர விடுதலை பெற்றதற்கே - விடி
வெள்ளியாய் அங்கே திகழ்ந்து நின்றான்.

பெண்ணிற்கும் விடுதலை வேண்டுமென்றான் - பெருமை
அவர்க்கு முலகினில் உண்டு என்றான்;
மண்ணிற் பிறந்தவர் யாவருமே - மனித
சாதியிலே ஓரங்க மென்றான்;
கண்ணிற்குக் கேடுகள் செய்யமாட்டார் - காதற்
பெண்ணிற் கேனோர கொடுமையென்றான்;
ஆணிற்குப் பெண்கள் இளைத்ததில்லை - அவர்
அன்னை உமாவின் சொரூபமென்றான்.

சாதிகள் புவியினில் இல்லையென்றான் - சமயச்
சண்டைகள் உலகிற்கு வேண்டாமென்றான்
நீதிகள் யாவர்க்கு மொன்றேயென்றான் - நிற
வேற்றுமை நீங்கிட வேண்டுமென்றான்;
தீதில் அறங்கள் புரிகவென்றான் - சிந்தை
தன்னில் ஒழுக்கம் நிறையுமென்றான்;
காவிய மிங்கே பிறக்குமென்றான் - கலி
காலமும் மாறியே தீருமென்றான்.

இந்தியத் தாயின் மக்களுக்குள் - இதய
மிணைந்த ஒற்றுமை வெண்டுமென்றான்;
முந்திய சுதந்திர வாழ்வதனை - நாம்
முயன்றால் பெற்றிட லாகுமென்றான்;
பிந்திய ஆட்சியின் போகமெல்லாம் - பிழை
யானவை என்றே உணர்ந்து விட்டால்,
சிந்திய இரத்த முதவுமென்றான் - நல்ல
சீரிய வாழ்வும் கிடைக்குமென்றான்.

காக்கைக் குருவியைப் பாடியவன் - காளி
தேவி அருளையும் பாடிசசென்றான்
வாழ்க்கை வினோதங்கள் செப்பியவன் - வளர்
விஞ்ஞான விந்தையை வியந்து நின்றான்;
வாக்கினால் வீரத்தைப் போற்றியவன் - வர்ண
ஜால வடிவையும் வாழ்த்திவந்தான்;
காக்கும் தொழில்களைக் காட்டியவன் - கலை
ஞானத்தை நன்கு நவின்றிடுவான்

பாப்பாக் குழந்தைக்குப் பாடியவன் - பள்ளிப்
பிள்ளைக்கும் புத்தியை ஓதியவன்;
கூப்பாடு போட்டே பாமரருக்கும் - குரல்
வீச்சினால் உண்மையைக் காட்டியவன்;
சாப்பாடு போதாத ஏழைகட்கும் - சத்து
உண்டியி லுழன்றிடும் வீணருக்கும்;
வாய்ப்பாட மாகவே வந்தே மாதர
வார்த்தையின் பொருள் ஊட்டியவன்.

தன்வாழ்வை தமிழுக்கே அர்ப்பணித்தான் - தாய்
மொழியினைத் தரணியில் வாழவைத்தான்;
பன்னெடுங் காலக்கவி வழக்கைப் - பாறி
பாவிலே புரட்சியைச் செய்துவிட்டான்;
அன்மொழி அணிதொகை யாப்புகளை - அவன்
அலட்சியமாக ஒதுக்கி வைத்தே,
சொன்னெடும் பாக்கள் எழுதிவைத்தான் - சொல்லில்
மக்கள் உணர்ச்சியைக் காட்டிச் சென்றான்

தமிழ்தனை உயிருக்கும் மேலெனக்கொண்டு - தரியாத
செல்வத்தைக் கீழெனக் கண்டு,
அமிழ்தான கவிதைபல் லாயிரம்செய்தான் - அழியாத
அமரனாய் அவன் ஏகிவிட்டான்;
தமிழ்மாது தாங்கொணாத் துயரிங்கு கொண்டாள் - தனை
வாழச் செய்தவன் அவன்தானே என்றாள்;
அமிழ்தாக அவன்வாக்கை நாம்போற்ற வேண்டும் - அவனுக்கு
பாமாலை புனைந் தேத்த வேண்டும்.

*1. யாழ் இலக்கிய நண்பர்கழக கவியரங்கு:-பாரதிக்குப் பாமாலை 1966*
*2. காங்கேசன் துறை இளந்தமிழர் மன்ற பாரதிவிழாக் கவியரங்கு 1966*
*3. இலங்கை வானொலி இளைஞர் மன்ற ஒலிபரப்பு : 19.09.1969*

## 'பூம்புகாரில் ஒருநாள்'

கனவாம் கனவு காலக்கழிவு;
நனவாகி விடில் நல்ல நினைவு.
எனநான் எண்ணிக் கனவைக் கலைத்தேன்;
கவிதாதேவி அருட்குத் துதித்தேன்;
நன வாகிவிடும்; நம்பிக் கொண்டேன்;
அதனாலதனை அவைக்குத் தந்தேன்;
பலமாயுழைத்து பகிர்ந்தே வாழ்ந்து.
படைப்பீர் பழைய புகாரைப் புதிதாய்.

நானோர் குழந்தை; நல்ல நிலவு;
ஆரோ ஒருத்தி; அழகுத் தருக்கி
பாரோர் போற்றும் மங்கை பொன்னி
பாங்காய் என்னைப் பாடி மயக்கி
வேறோர் உலகிற் கெடுத்துச் சென்றாள்;

பாதை முழுக்க பரவசக் காட்சி
பச்சை நிறத்து பசிய தழைகள்
உச்ச வளர்ந்த உயர்ந்த மரங்கள்
கற்றை நெல்லில் கனக்கும் மணிகள்
கூரை வேய்ந்த கொட்டில் வீடு
கூடிக் குலவும் குடும்ப வாழ்வு
பாடி யுழைப்புப் புடைக்கும் தெய்வம்
மாடி வீட்டில் வாழாத் தெய்வம்
ஆடும் மயில்கள் அரற்றும் குயில்கள்
அழகு அழகு; அதுவெறும் கனவு.

கனவாம் கனவு; காலக் கழிவு;
நனவாகி விடில் நல்ல நினைவு;
பலமா யுழைத்து பகிர்ந்தே வாழ்ந்து;
படைப்பீர் பழைய புகாரைப் புதிதாய்.

நானோர் சிறுவன் நண்ணும் காலை
வான முகட்டை வளைந்து பார்த்தேன்
காணுங் கண்கள் களிப்புக் கண்கள்
நீல முகிலை நிமிண்டும் வண்ணம்
கூடம் மாடம் குவி கோபுரங்கள்
எட்டாத் தொலைவில் ஏங்கும் கலத்தை
கிட்ட அழைக்கும் விளக்கம் தோன்ற,
பட்டாம் பூச்சி பருவ மதனால்,
தொட்டா லென்ன என்றே நினைப்பேன்;
நீண்டு விரிந்த நீலக் கடலில்
நினைவைக் கொடுத்து உலகை மறப்பேன்;
பாய்ந்து வந்த கலங்கள் யாவும்
பதுங்கும் புகாரின் பரிவைப் பார்ப்பேன்;

அகன்ற வீதி அலைந்து திரிவேன்;
அங்கு மிங்கும் துள்ளிக் குதிப்பேன்;
வெள்ளை நிறத்தார் சப்பை முகத்தார்
கொள்ளைச் சிவப்பர் குறுந் தாடியினர்
மிடுக்குத் தொப்பி முறுக்கு மீசை
துடுக்கு நடையர் பலரைக் காண்பேன்;
யானை குதிரை நடக்கக் காண்பேன்;
யாழின் இனிமை இசையும் நுகர்வேன்;
பாழாய்ப் போச்சு; பழைய கனவு.

கனவாம் கனவு; காலக் கழிவு;
நனவாகி விடில் நல்ல நினைவு;
பலமா யுழைத்து பகிர்ந்தே வாழ்ந்து;
படைப்பீர் பழைய புகாரைப் புதிதாய்.

நானோர் இளைஞன் நண்பகல் வேளை
நாள் அங்காடி நாடிச் சென்றேன்;
ஆகா அங்கு குவிந்த பொருளின்
அளவை என்னால் அரற்ற இயலாது
ஒன்றோ இரண்டோ ஓராயிரம் ரகம்;
ஒண்சுடர் மணிகள் ஒப்பிலா வுடைகள்
உண்ணும் பொருட்கள் உப்பு வகைகள்
சுண்ணப் பொடிகள் வண்ணக் குழம்பு
அந்தோ அவற்றை அளப்போ அரிது;
பற்பல மனிதர் பலபல பாசை
செப்பித் திரியும் செயலையும் கண்டேன்;
கற்பனை யல்ல; காவிய உண்மை
அற்புத மான அழகிய நகரம்;
முற்று மழிந்த முந்திய கனவு.

கனவாம் கனவு; காலக் கழிவு;
நனவாகி விடில் நல்ல நினைவு;
பலமா யுழைத்து பகிர்ந்தே வாழ்ந்து
படைப்பீர் பழைய புகாரைப் புதிதாய்.

நானோர் அழகன் நாடும் மாலை
இன்ப விழாவாம் இந்திர விழாவில்
நல்லோர் பெண்ணை நாடி யலைந்தேன்;
வானோர் மகள்போல் வந்தாள் ஒருத்தி;
ஞான நல்லறம் சொன்னாள் ஒருத்தி;
கீத மிசைத்தாள் கானக் குறத்தி;
'தானத் தனத்த' கணிகை நடித்தாள்;
தாளம் போடும் மனதால் துடித்தேன்
தாவி அணைத்தேன்; தளிர்க்கரம் கொண்டேன்;
வாடி பெண்ணே வாழ்வோம் என்றேன்;
ஆடி வந்தாள்; அலுப்பைத் தீர்த்தாள்;
அன்பும் அறமும் அணைய வாழ்ந்தோம்;
அந்தோ! அதுவும் அறுந்த கனவு.

கனவாம் கனவு; காலக் கழிவு;
நனவாகி விடில் நல்ல நினைவு;
பலமா யுழைத்து பகிர்ந்தே வாழ்ந்து
படைப்பீர் பழைய புகாரைப் புதிதாய்.

நானோர் கிழவன் சந்திப் பொழுது
ஞான வாழ்வை நாடுந் துறவு
கண்ணகி பிறந்த காவிரி நகரில்
கழிந்த வாழ்வின் களிப்புத் தோன்றும்;
காவியக் கதைகள் கனக்கத் தெரியும்
காதல் வாழ்வின் கனிவு புரியும்
பாவியல் துறையில் படைப்புத் தெரியும்

பாடல் இன்பப பண்ணும் புரியும்
ஓவியச் சிற்ப நுட்பமும் அறிவேன்
ஓடல் ஆடல் ஒழுக்கமும் உரைப்பேன்
தாவிடும் மனத்து சங்கதி புரியும்
சாத்திரம் சூத்திரம் சகலதும் தெரியும்
காவியம் வாழ்க்கை காவிரி வாழ்க்கை
கண்டது கழிந்த காலத்துக் கனவு

கனவாம் கனவு; காலக் கழிவு;
நனவாகி விடில் நல்ல நினைவு
பலமாய் உழைத்து பகிர்ந்தே வாழ்ந்து
படைப்பீர் பழைய புகாரைப் புதிதாய்
புகாரில் ஒருநாள் புகுந்தால் போதாது;
புதிது பழைய கனவால் ஆகாது;
புகாரைப் படைப்போம்; புதிதாய்ப் படைப்போம்;
யுகமாய் யுகமாய் யுகமாய் வாழ்வோம்.

*யாழ்/ இலக்கிய நண்பர்கழக கவியரங்கு 25.4.1968*

# செந்தியரை வாழ்த்துகின்றோம்

| | | | |
|---|---|---|---|
| தித்திக்கும் | தமிழ்க்கவிதை | சிந்தைதனில் | நிறைவூட்டும்; |
| எத்திக்கும் | ஒளிபரப்பி | சுடர்விளக்கு | மெருகூட்டும் |
| பத்திக்கு | ஆலயத்தில் | பாங்கான | நற்சிலைகள் |
| யுக்திமிகு | சபைக்கழகு | செந்தியங்கு | தானிருத்தல்; |

| | | | |
|---|---|---|---|
| காவியத்தின் | சீர்மைதனைக் | காதினிக்கக் | கேட்டிடலாம்; |
| கல்வியதில் | மேனிலையைக் | கேள்வியினால் | அடைந்திடலாம் |
| பாவியலில் | நுட்பங்களை | பாங்காய் | புரிந்திடலாம் |
| பாடல்பாடி | பரிசுபெறும் | பாக்கியதை | பெற்றிடலாம்; |
| தேனினிய | இலக்கியங்கள் | செய்ததமிழ் | புலவோர்கள் |

செய்திகளைத் தேடிடாமல் செப்பமாய் அறிந்திடலாம்
வாதுகளை நுகர்ந்திடலாம்; வார்த்தை வன்மை உணர்ந்திடலாம்
வாத்தியார் செந்தியவர் வண்மைமிகு வாய்திறந்தால்

இலக்கியத்துக் காட்சிகளை இன்பமுடன் பார்த்திடலாம்;
இன்னமுதப் பாடல்களை இனிமையுடன் படித்திடலாம்
இலட்சியத்துக் கதைகளையும் இரசிப்புமிகு கட்டுரையும்
இச்சையுடனே படித்து இரசிகர்களாய் மாறிடலாம்
அலட்சியமாய்த் தள்ளிவிடும் அருமையான இலக்கியத்தில்
ஆழ்ந்தெடுத்த முத்துக்களை ஆசையுடன் துய்த்திடலாம்
சலாக்கியங்கள் இவைதானா; சாற்றிடவே முடியாது
சாதனைகள் ஆயிரமாம் செந்தியவர் எழுத்துக்களில்.

வாயார வாழ்த்துகின்றோம் வாழ்கவென்று வாழ்த்துகின்றோம்
வாழ்நாள் பல்லாயிரமாய் வளர்க வென்று வாழ்த்துகிறோம்
தாயாரின் மிக்கராய் தனியன்பு கொண்டவரை
சாந்திபெற்று வாழ்கவென்று சத்தியமாய் வாழ்த்துகிறோம்;
தூயவரைத் துணிந்தவரைச் சூரத்தனம் புரிந்தவரை
சூரியனைப் போலுலகில் வாழ்கவென்று வாழ்த்துகிறோம்
நேயமான தமிழ்மாதின் புத்திரனாம் செந்தியவரை
நெடுங்காலம் வாழ்கவென்று ஐம்பதினில் வாழ்த்துகின்றோம்.

*அரங்கேற்றம்:- 'இரசிகமணிக்கு' யாழ்/ இலக்கிய நண்பர் கழகம் நடாத்திய பாராட்டு விழா (மல்லாகம்)*
*தொகுப்பு :- "இரசிகமணி மணிமாலை"*
*1967*

# தாதியாம் தெய்வ மகள்

வண்ணக் கோபுரம் கட்டி வணங்கலாம்;
    வார்த்தையால் கவி பாடிப் புகழலாம்;
எண்ண மீதினில் ஏற்றிப் போற்றலாம்
    எல்லை யற்ற பெருமையைச் சேர்க்கலாம்;
பண்ணும் காவியப் பாவைய ராக்கலாம்;
    பார்முழுக்க அவர் புகழ் பரப்பலாம்;
கண்ணின் மிக்காய் பணி புரி தாதியர்
    கடமை வேட்கைகையைக் காட்சிப் படுத்தலாம்.

சிந்தை செயல்களில் வஞ்சக மில்லையாம்
சின்னத் தனங்கள் சிறுமைக ளில்லையாம்
பந்த பாசத் தொடர்புக ளின்றியும்
பாரில் விஞ்சு சிறப்புக ளின்றியும்
எந்த நேரமும் ஏவிய வேலையை
எவ்வகை மன வெறுப்புக ளின்றியே
உந்தும் சேவை உணர்ச்சி விளைவினால்
ஊக்க மாக உழைத்தே உயருவார்.

மிஞ்சு நோயின் மிக்க கொடுமையால்
மிஸ்'சென் றழைத்து கேட்பவர் தேவையை
சிந்தும் புன்னகை முகத்துடன் செய்கின்ற
சீரிய நங்கையர் தாளில் வணங்கலாம்.
பஞ்சி என்பது அங்கவர்க் கில்லையோ
பாசம் நேசம் பசிகூட இல்லையோ
கொஞ்ச நேரமும் ஓய்வின்றிச் சுழல்கின்றார்.
கொஞ்சும் மொழியினில் குசலமும் கேட்கின்றார்.

ஆடுதல் போலவே ஓடுதல் செய்கின்றார்
பாடுதல் ஒக்க பாகாய் பேசுறார்
நாடுதலா மென நம்மை அணுகியே
நண்பர்கள் போலக் கேலியும் செய்கின்றார்.
ஆறுதல் செய்திடும் அன்னையராய் வந்து
அன்புடன் மருந்தினை அருந்தவும் செய்கின்றார்.
தேறுதல் மொழிகளும் செப்பியே போகின்றார்
தெய்வத்தை ஒத்தவர் தாதியர் உண்மையே!.

*(இளைஞர் மன்ற ஒலிபரப்பு :- 29.5.1968)*

# 'இனிது இனிது இளமை இனிது'

இனிது இனிது இளமை இனிது
மனிதனாகப் பிறந்த வாழ்வில்
மாறும் காலச் சுழற்சித் தேய்வில்
புனித னான பிள்ளைப் பருவம்
புரியும் பருவ மதனாய் மாற

இனிது இனிது இளமை இனிது
உலக வாழ்வில் உயரும் எண்ணம்
உய்யும் வழியில் போகும் வேகம்
சகல கலையில் கல்வி தொழிலில்
சாரும் காதல்; தவிப்பு; மோதல்

இனிது இனிது இளமை இனிது
காதல் இன்பக் களிப்பின் காலம்
கன்னி யழகில் மயங்கும் மோகம்
வாழ்தல் இன்றேல் மாழ்தல் என்று
வஞ்சி னங்கள் கூறுங் காலம்.

இனிது இனிது இளமை இனிது
கொடுமை போக்கும் கொள்கை நோக்கு
மிடியைத் தீர்த்து மிஞ்சு முழைப்பு
கடமை வேட்கை கண்ணிய வாழ்க்கை
அடிமைத் தனத்தில் அடங்கா வெறுப்பு.

இனிது இனிது இளமை இனிது
உச்சமான உயர்ந்த இன்பம்
உண்மையான சுவர்க்க மிதுவே,
அச்ச மென்ற அவதி இல்லை
அணுகும் நோயின் கொடுமை இல்லை.

இனிது இனிது இளமை இனிது

1967

*அஞ்சல் ஒலி : ஐப்பசி 1971*

## 'நேயக் கன்னி'

கன்னியிதழ்கடை புன்னகையின்விலை
காவியமாகாது; - அவள்
கண்ணிலொளிர்ந்திடும் மின்னலழகுமோர்
ஓவிய மாகாது.

பாதமாம் தாமரை பரவிடும் பாவமோர்
நர்த்தன மாகாது - அந்த
மோகனச் சுந்தரி மோகவலையோர்
உயிரையும் போக்காது.

வஞ்சிக்கொடி அவள் மேனிஎழிலினை
விஞ்சவும் மாட்டாது - வெறும்
கஞ்ச மலரவள் கொஞ்சும் முகத்தினை
ஒக்கவும் மாட்டாது.

சிந்தும் சிரிப்பொலி தந்திடும் சுகம் நல்ல
தென்றலாகாது - தேறல்;
தேனிதழ் சுவையதன் சுகிப்புடனேயிங்கு
ஈடாக மாட்டாது.

மல்லிகைப் பூஅவள் கூந்தலழகினை
கூட்டவே கூட்டாது - கோல
மாமயில் சாயல் மங்கையின் சாயலை
மாற்றவும் மாட்டாது.

பண்ணில் பரவசம் ஆக்குமவள்குரல்
பாடலுமாகாது - அந்தப்
பைந் தொடியின்கரம் பற்றிடும் பாக்கியம்
வேறாருக்கும் வாய்க்காது.

*1967*

# நெஞ்சிலே தைத்த நெருஞ்சி

நெஞ்சக் குளத்தில் நினைவின் அலைக்கு
பஞ்ச மில்லை பாரில் வாழ்வு
துஞ்சு மட்டும் துன்பந் தானே!
தஞ்ச மேது தணியாத் தவிப்பு.

மாலை நேர மயக்குந் தென்றல்
சோலை ஒன்றில் சோடி சேர்ந்து
வாலை வயதின் வனப்பால் இயைந்து
சாலை வாழ்வில் சலிப்புத் தோன்ற

காதல் காதல் கவிதைக் காதல்
காமங் கலந்த மனத்தின் மோதல்
சாதல் நன்று; சாதல் நன்று;
தவிக்கும் உளத்தின் ஓதல் இன்று.

கன்னி கண்ணின் கனிந்த பார்வை
காளை என்றன் கனவு அன்று;
உன்னி உன்னிப் பார்க்கும் போது
உயிரைக் கொல்லும் அம்பு இன்று.

மாது அவளின் மயக்கும் மொழிக்கு
மந்தி ரத்தின் சக்தி அன்று
சூது வாது புரிந்த பின்பு
தூசில் மிதக்கும் கிருமி இன்று;

அன்னம் பழிக்கும் அழகு நடையில்
ஆசை கொண்டேன் அன்று கண்டு,
எண்ணிப் பார்த்துத் தெளிந்த பின்பு
ஏதம் என்று கொண்டேன் இன்று.

பரிந்து அணைந்த பாவை என்னை
சொரிந்து போனாள் சோடி தேடி,
புரிந்து போச்சு புன்மைக் குணங்கள்
புழுங்கும் மனத்தில் புழுவே இன்று.

மஞ்சில் வைக்க மனது கொண்ட
செஞ்சொல் பேசும் பாவை அன்று;
நஞ்சில் கெட்ட நஞ்சாய் போனாள்;
நெஞ்சில் தைத்த நெருஞ்சி இன்று.

*1967*
*இலங்கை வானொலி இளைஞர் மன்ற ஒலிபரப்பு 30.11.1967*

# ஒரு சோகக் கவிதை

சோகக் கவிதை யொன்று நான் பாடப்போகின்றேன் - நோகும்
மனயாழின் மீட்கும் துயர்க்குரலாய்
சோகக் கவிதையொன்று நான் பாடப்போகின்றேன்;

அன்னை வயிற்றுலகில் சின்னக் கருவாகி,
அழகுப் புவியுலகில் அன்புப் பிறப்பாகி
தீம்பால் குடித்து சிறுதுகளாய் உணவருந்தி
வாக்கு மழலைகளாய், நேயப் பெருக்கதுவாய்
காட்டுகின்ற புன்னகைகள் காண்போரின் ஏக்கமதாய்
வாடிய என் பெற்றோரின் வாழ்வுக் கனவுகளாய்
இன்பங்களாய் இணைந்த இரு உள்ளங்களின்
ஈடிலா நினைவுச் சின்னமதாய்
பிறந்தேன் சின்னஞ் சிறுபிராயம்
ஏக்கங்கள் எனைவருத்தும் தாக்கங்களாக
ஏங்கினேன்; எண்ணி அழுதேன்;
அன்னை தீம்பால் அருந்தும் நினைவினிலும்
அணைக்கும் கரச்சூட்டின் ஆசைப் பிடிப்பினிலும்,
வண்ண நிலவைப் பிடிக்கும் அவாவினிலும்
சின்னச் சட்டைகட்கும் சீரான நகைகளுக்கும்;
வார்த்தை பொறுக்காத வன்மப் பகையினுக்கும்
எண்ணி எண்ணி அழுதேன்! நான் ஏங்கி ஏங்கி அழுதேன்;

சோகக் கவிதை யொன்று நான் பாடப்போகின்றேன் - நோகும்
மனயாழின் மீட்கும் துயர்க்குரலாய்
சோகக் கவிதையொன்று நான் பாடப்போகின்றேன்;

சின்னச் சட்டையுடன் சிலேற்றுப் பென்சிலுடன்
'எண்ண' எழுத படிப்பதற்கு என் அன்னை
சின்னக் கம்பெடுத்து சிணுங்கச் சிணுங்கடித்து,
வண்ணப் புத்தகங்கள் வாங்கிக் கைகொடுத்து
பள்ளிக் கனுப்பி 'படிமகனே' என்றுரைத்து,
மெல்ல மலர்க்கை பிடித்து மென்தரையில்
அன்னை 'ஆனா' எழுதிப் படிப்பித்து,
பள்ளியிலே பாப்பாக் கதைகேட்டு, பாப்பாடி
ஒன்றோடு ஒன்றென்று எண்ணிப் படிக்கையிலே
எத்தனையோ வேதனைகள் என்னிதயத் தரங்கில் - ;
படிப்பினிலே பிழைவிட்டு அடிவாங்கும் வேதனையில்
பாப்பாத் தம்பியுடன் விளையாடும் ஆசையிலும்,
பள்ளிக்குப் போக பனிக்குளிரில் குளிக்கையிலும்
துள்ளி விளையாடும் சுதந்திரம் இல்லாமையிலும்
ஒத்த வகுப்பு பரஞ்சோதி, திலகவதி,
முத்துக் கிருட்டினன், முழிகாறிக் கண்ணம்மா
புத்தம் புதுப் பொருட்கள் புழுகிவந்து
காட்டுகையில், பக்கத்து வீட்டு
பார்வதி மச்சாள் என்னை, இச்சித்து பின்பு
அடித்து, இடித்து, கிள்ளி, பென்னம்பெரு
விரலை மடக்கி ஒருக்களித்து 'உன்னுடனே
கோபம்; கதையாதே' என்கின்ற போதினிலும்
எண்ணி எண்ணி அழுதேன்; நான் ஏங்கிஏங்கி அழுதேன்;

சோகக் கவிதையொன்று நான் பாடப்போகின்றேன் - நோகும்
மனயாழின் மீட்கும் துயர்க்குரலாய்

சோகக் கவிதையொன்று நான் பாடப்போகின்றேன்;
காலச் சுழற்சியிலே கல்வியிலே முன்னேறி
ஏழு எட்டுப் படிக்கையிலே என்வீட்டு
வறுமையினால், ஊண் உறக்கமின்றி
உழைத்து உயிர்பிடித்து, தாம்
பெற்ற மகனைத் தரணியிலே உயர்த்துதற்கு,
கல்வியினில் வல்லவனாய் கண்டு களிப்பெய்துதற்கு
கற்பதனால் வரும்நல்ல வாழ்க்கைக் கனவினிலே
எனையீன்ற தெய்வத்தின் ஏக்கத்தை நான்கண்டு,
நித்திரையுமின்றி, நிம்மதிகள் தானுமின்றி...;
எத்தனையோ படித்தும் எள்ளளவும் புரியாமல்
அத்தனையும் யானைந்து அழுதேன்; அன்னையவள்
துயர் கண்டழுதேன்; ஆங்கு அவளின்
எண்ணத்தை ஈடேற்றும் ஏலாமைக்காய் அழுதேன்;
மெலிந்துவிட்ட அவளுடம்பின் நரம்புகளைப் பார்த்தழுதேன்;
வறுமையினால் உருக்குலைந்த வாழ்வை நினைத்தழுதேன்
எண்ணி எண்ணி அழுதேன்; நான் ஏங்கி ஏங்கி அழுதேன்.

சோகக் கவிதையொன்று நான் பாடப்போகின்றேன் - நோகும்,
மனயாழின் மீட்கும் துயர்க்குரலாய்
சோகக் கவிதையொன்று நான் பாடப்போகின்றேன்;

காலச்சுழற்சியதில் கல்வியதன் தேவிஎன்மேல்
காதல் கொண்டிட்டாள்; கருத்தூன்றி நான்படித்தேன்;
வாழும் பிரபஞ்ச வனப்புகள், தோற்றங்கள்
சுழலும் அதனமைப்பு தொக்கிநிற்கும் புதுமையுடன்
மாளாக் கலைஞானம் மனித மனத்தாழம்
ஆராயும் போதுநான் ஆனந்தமாய் இருந்தேன்;
கலைத்தேவி கண்வீச்சில் என்னை மறந்திருந்தேன்;
எழில்வாய்ந்த இவ்வுலகச் சூட்சுமத்தை அறிந்திருந்தேன்

வானத்துப் பறவையிலும், வண்ணநிற மலர்களிலும்
மோனத்து மலையினிலும், முழுநிலவுக் குளிர்மையிலும்
கானத்து ஓடையிலும், காணுகின்ற யாவற்றிலும்
யானும் அவளுருவை, அழகுருவைத் தரிசித்தேன்;
நீண்ட நெடுநாட்கள் கணங்களதாய்க் கழிய
தோற்றிய சோதனையில் தோல்வியை நான்கண்டழுதேன்;
வாக்கினது தெய்வமெனை வஞ்சித்தாள் என்றுணர்ந்து,
தேற்றுவாரின்றி மனத்தில் தேம்பியழுதேன் நான்;
எண்ணிஎண்ணி அழுதேன் நான் ஏங்கி ஏங்கி அழுதேன்.

சோகக் கவிதையொன்று நான் பாடப்போகின்றேன் - நோகும்
மனயாழின் மீட்கும் துயர்க்குரலாய்
சோகக் கவிதையொன்று நான் பாடப்போகின்றேன்.

பாடுபட்டு படித்து பட்டமொன்று பெறநினைத்தேன்;
மாறுகின்ற காலநிலை, மனிதனது மனநிலைகள்
கூறுகின்ற சமயங்கள், குரலெழுப்பும் அறிஞர்கள்
பாடங்கள் நான்படித்து மனத்தரங்கில் சிந்தித்து
அஞ்ஞான இருள்தொலைந்து விஞ்ஞான வழியதனால்
மெஞ்ஞான ஒளிபெற்று இறுமாந்து இருந்தேன்நான்;
என்ஞானம் ஒப்பாத 'மெஞ்ஞான குரவர்கள்,
தம்ஞானம் காட்டித் தடுத்தார்; மனமழிந்தேன்;
வாழ்வில் விரக்தியுற்றேன்; வாட்டம் மிகக்கொண்டேன்;
தாழ்வுற்று வறுமைமிஞ்சி கதிகெட்ட உலகமதில்
யாரெனைப் பார்ப்பார்? என்குரலை யார்கேட்பார்?
நோவுற்றேன்; பாடுகின்றேன் சோகக் கவிதையொன்று;
எண்ணி எண்ணி அழுதேன்; நான் ஏங்கி ஏங்கி அழுதேன்.

சோகக் கவிதையொன்று நான் பாடப்போகின்றேன் - நோகும்
மனயாழின் மீட்கும் துயக்குரலாய்
சோகக் கவிதையொன்று நான் பாடப்போகின்றேன்.

*1968*

# மாலை

மாலை என்பதோர் மயக்கும் பெண்மையாம்;
மதி மயக்கிடும் இன்பக் கன்னியாம்
காலை யானதும் மாலை யானதும்
காலை யாவதும் மாலை யாவதும்
சாலை வாழ்வடா சலிப்பு வாழ்வடா
சாந்தி இல்லாத தவிப்பு வாழ்வடா
மாலை என்பதோர் மயக்கும் பெண்மையாம்

பாலை வனத்திலும் பசும் புற்சோலையாம்;
பகட்டு வாழ்விலும் பாசச் சாயையாம்;
ஏழை வீட்டிலும் இன்பக் கோவையாம்;
எந்தர் கூட்டிலும் இரக்கச் சோபையாம்;
மாலை என்பதோர் மயக்கும் பெண்மையாம்

கழிந்த நாளிடைக் கவலை போக்கிட
காதல் கன்னியின் காட்சி கிடைத்திட
உழன்ற உடலினை உசுப்பி ஊக்கிட

உரிமை யோடுநற் தென்றல் தழுவிட
மாலை என்பதோர் மயக்கும் பெண்மையாம்.

பறவை பாடிடும் சப்த கோலங்கள்
பண் இசைத்திடும் கோவில் கூடங்கள்
கறவை அணைத்திட விரையும் ஆவினம்
கண்கள் காதிற்குத் தெவிட்டா இன்பமாம்;
மாலை என்பதோர் மயக்கும் பெண்மையாம்.

மல்லி மலர்ந்திடும்; மணத்தைப் பரப்பிடும்
அல்லி அலர்ந்திடும் அழகைக் காட்டிடும்
பல்லி பாவையைப் பார்த்துப் பேசிடும்
பாரில் பாசத்துக் குரல்கள் கேட்டிடும்
மாலை என்பதோர் மயக்கும் பெண்மையாம்.

வான வீதியில் மயக்கும் வண்ணங்கள்
வனிதை நெஞ்சினில் இனிக்கும் நினைவுகள்
ஈன வாழ்வினில் இன்பம் துய்த்திட
இயற்கை தந்ததாய் இலங்கும் மாலையாம்
மாலை என்பதோர் மயக்கும் பெண்மையாம்.

மலை முகட்டினில் வெள்ளிப் பாறைகள்
மன் மதன்வினை யாடும் சோலைகள்
கலை பிறந்திடும் காட்சி வெள்ளங்கள்
கவலை போக்கிடும் கன்னி மாலையாம்;
மாலை என்பதோர் மயக்கும் பெண்மையாம்.

மறந்து விட்டதன் மங்கை கடலினை
மனத்தில் கொண்டவன் போல ஆதவன்
பறந்து வந்ததைப் பார்த்த பத்தினி
பாச அலையவள் பசும்பூ மாலையோ?
மாலை என்பதோர் மயக்கும் பெண்மையாம். *1968*

# 'காவி ஏன் கட்ட வேண்டும்'?

காவியேன் கட்ட வேண்டும்;
கவலைகள் வாழ்வில் மிக்கால்
ஓடியா போக வேண்டும்;
ஒருபோதும் ஆகா தப்பா;
காவியம் வாழ்க்கை காண்பாய்;
கவலையும் களிப்பும் ஆங்கே
ஆதியாம் அச்ச மேனோ?
அவனியில் வாழ்தல் வேண்டும்.

துறவுதான் சுய நலத்தின்
துன்னரும் உயர்ச்சி காண்பாய்;
உறவுகள் எல்லாம் என்றன்
உயிருக்கு மாசு என்பார்
பறவைகள் கூட வாழ்வில்
பங்காளி யாகும் விந்தை

திறமதும் புரிய மாட்டார்
சிந்தையை ஒடுக்கி வாழ்வர்.

உறவுகள் வாழ்வில் வேண்டும்;
உன்னத அன்பு வேண்டும்;
பிறிதின் நோய் போற்றி வாழும்
பெட்பான அறிவும் வேண்டும்;
கறங்கது வாழ்க்கை உண்மை
காற்றில்நாம் ஆட வேண்டும்;
அறம்படு வழியில் நின்று
அவனிக்கும் உதவ வேண்டும்.

கடல்கூறும் பாடம் இதுவே;
கண்ணிய வாழ்வும் இதுவே;
விடல்வேண்டும் தோணி என்மேல்
வீரப்போர் புரிய வேண்டும்;
தொடல் வேண்டும் மணி வயிற்றில்
தோன்றிடும் மீனும் முத்தும்
பெறல் வேண்டும் மனித சாதி
பேசுவாள் கறுத்தக் கன்னி.

வானமாம் மங்கை தன்மேல்
வண்ணமாம் காவி கட்டி
ஆனதாம் பயனும் யாதோ?
அழியாத வீடும் உண்டோ?
தானமாய் எம்தம் வாழ்வை
தரணியில் வாழ்வோர்க் கீந்தால்
காவியேன் கட்ட வேண்டும்
கடல்நங்கை கேட்டு நின்றாள்.

*1968*
*இளைஞர் மன்ற ஒலிபரப்பு, 04.08.1968,*
*'கடல் வெண்ணகை பெற்றிருந்தும் காவியேன் கட்டவில்லை'*
*என்ற சுரதாவின் கவிதைக்குப் பதிலாக எழுதப்பட்டது.*

## அழகு வாய்ந்த யாழ்ப்பாணம்

உலகில் நகர்கள் பலவுண்டு
உண்மைப் புகழும் பெறலுண்டு
அலகில் அறிவில் நிறைந்தாலும்
அருட்டும் அழகில் சிறந்தாலும்
நிலவும் அன்பில் மிளிர்ந்தாலும்
நீசர் நிலையும் அங்குண்டு
அழகும் அன்பும் அருட்குணமும்
அகத்தே கொண்டதெம் யாழ்ப்பாணம்.

புலவர் புகழைப் பெற்றுலகில்
புரவலர் தமையும் கொண்டதுவாய்
இலவர் என்பதே இலையாகி
இனிதே இலங்கும் யாழ்ப்பாணம்
உழவர் உயர்ந்த வினைஞர்கள்
உழைப்பில் மிகுந்த உத்தமர்கள்
வலைஞர் வாழும் வசிப்பிடங்கள்
வளைத்துப் பிடித்த யாழ்ப்பாணம்.

இறைவன் கோவில் பலவுண்டு
இன்பப் பூங்கா அங்குண்டு
நிறையும் அறிவின் நுட்பத்தை
நிகழ்த்தும் கல்விக் கூடமுண்டு

உறையும் கலையின் பெருக்கமதை
    உணர்த்தும் அரங்கும் பலவுண்டு
மறையும் அறிவின் குறைபாடு
    குவியும் நூல்கள் நிலையமதால்.

கடைகள் நிறையச் சனக் கூட்டம்
    காண்போர் எல்லாம் மனம்மகிழ
அடையா நெடிய கதவங்களால்
    அகன்ற வாசல் பலவுண்டு
இடையில் மெலிந்த பாவையரும்
    இதயம் மெலிந்த ஆடவரும்
படையாய்த் திரண்டு விளையாடும்
    பரந்த வெளிகள் பலவுண்டு;

புறத்தில் அழகு மிக்கதுவாம்
    புதுமை பலவும் கொண்டதுவாம்
அறத்தை அகத்தே வளர்ப்பதினால்
    அன்பில் விஞ்சி நிற்பதுவாம்
மறத்தில் மிக்க மாந்தர்களும்
    மழலைக் குழந்தை குட்டிகளும்
திறமாய் திளைத்துச் சிறந்ததுவாம்
    தீந்தமிழ் வாழும் யாழ்ப்பாணம்.

நிலவும் தென்றல் காற்றதுவும்
    நீண்டு உயர்ந்த சோலைகளும்
புலவன் வாயின் செந்தமிழும்
    புதுமை அறிவின் பிடிப்புகளும்
பழமைப் பண்பின் கோலங்களும்
    பாரில் ஒருங்கே இணைந்திருந்து
அழகும் அழகும் சேர்ந்ததொரு
    அழகு வாய்ந்தது யாழ்ப்பாணம்.

*1968*

# பொங்கிடும் மங்களம்

கங்குல் புலர்ந்திளம் ஆதவன் உதித்தனன்
காக்கைகள் குருவிகள் கானம் இசைத்தன
பொங்கும் மணியோசை எங்கும் பரந்தது
போற்றிப் பனுவல்கள் காதில் நுழைந்தது
மங்கள மானதை மாதின் வருகையால்
மன்னுயிர் யாவுமே மகிழ்ச்சியை மாந்தின;
தங்கிடும் இன்பமே; தழைத்திடும் அவனியே
தையவள் கருணையால் தரித்திரம் அகலுமே.

வாசலில் கோலங்கள் வனிதையர் இட்டனர்
வண்ண மலர்களில் மாலை தொடுத்தனர்
தேசத்தில் எங்கணும் பொங்கல் நிகழ்த்தினர்
தேசு தருபவன் தாளில் படைத்தனர்
மாசு மறுக்களை மனத்தால் அகற்றியே
மகிழ்ச்சியால் பாடினர்; ஆடினர்; பரவினர்;
ஆசு புகழ்கவி ஆற்றி அவனியில்
அன்பும் அறமும் தழைக்க வென்றோதினர்.

கன்னியர் மனதினில் ஏக்கம் தணிந்தது
காளைகள் உள்ளமும் களிப்பில் மிதந்தது
பண்ணிய பயிரினம் செழித்து வளர்ந்ததால்
படைத்தவர் எண்ணமும் பாரில் நிறைந்தது
தண்ணிய சோலையில் தென்றல் தவழ்ந்தது
தையவள் கருணையால் இன்பம் நிறைந்தது
கண்ணிய மானநல் வாழ்வு முறையினால்
காவியம் பிறந்தது; கலைகள் தழைத்தது.

நீல முகட்டினில் மேகம் கலைந்தது
நீள் கடலோரத்தில் காதல் வளர்ந்தது;
பாலை வனத்திலும் பசுமை பிறந்தது;
பசுவின் மடியிலும் பாரம் கனத்தது;
காலக் கணிகைதன் கன்னிப் பருவத்தில்
காலடி வைத்தோர் களிப்பில் மிதப்பது
போலப் புதுமைகள் பாரில் தெரிந்தது
பொங்கிடும் மங்களம் எங்கும் நிறைந்தது

*இலங்கை வானொலி இளைஞர்மன்ற ஒலிபரப்பு*
*13.01.1969*

# வள்ளுவம்

வள்ளுவன் என்றோர் கவியிருந்தான் - அவன்
வார்த்தைகள் வாழ்விற்கு உதவுமென்பார்;
தெள்ளு தமிழ்க்கவி பாடிச் சென்றான் - தேன்
சுவையினை ஆங்கதில் தேக்கிவைத்தான்;
அள்ளவும் வற்றாத சுரங்கமடா - அவன்
ஆற்றிய திருக்குறள் அமிழ்தமடா
சொல்லுகில் அதன்திறம் பெருகுமடா - அதில்
தோய்ந்திடும் இன்பமே இன்பமடா

திருக்குறள் என்பது அவன் கவிதை - தீந்
தமிழினில் குழைத்ததோர் நற்கலவை;
இருள்மிகும் வாழ்க்கையில் ஒளிவிளக்கு - இன்ப
கோட்டையின் வாசலில் அகல்விளக்கு
அருள்பெற அறமலா நீ விலக்கு - இவ்
அவனியில் அன்பதன் திறம் விளக்கு
மருளுறு மானிட வாழ்வு தனில் - மன
மாசினைப் போக்கிடும் குறள் விளக்கு.

அறம்பொருள் இன்பத்தின் விளைவுடனே - பின்
அழியாத பேரின்ப வீடு என்பார்;
திறம்தெரி வள்ளுவப் பெருந்தகையும் - இச்
சீரிலே வாழ்வினை நோக்கிநின்றான்;
அறத்தினை அன்பினை அருட்குணத்தை - அரும்
பொருளினால் பொறையினால் ஆக்குகென்றான்
பிறப்பினால் பெருமைகள் கிட்டாதென்றான் - பீடு
வாழ்கின்ற விதத்திலே உண்டு என்றான்.

காதலின் நுட்பமும் பாரிலுண்டு - கனி
வாழ்வினில் அதற்குமோர் சிறப்புமுண்டு;
ஆதலில் வள்ளுவன் குறளிலுண்டு -அதன்
ஆனந்த ஆத்மார்த்த சக்தி கண்டு
தீதல்ல தீந்தமிழ் இலக்கியத்தில் - சிந்தைச்
சிறப்பினைக் காட்டிடும் காதல்வெள்ளம்
வாழ்தலில் அங்குநான் சத்துமுண்டு - எந்த
வார்த்தைக்கும் அடங்காத பொருளுமுண்டு.

வள்ளுவம் வாழ்க்கையின் வழிகாட்டி - எனக்
கொள்ளுவோம் கொள்ளுவோம் அதன்மாட்சி;
வள்ளுவம் உலகத்தின் பொதுவாட்சி -எனச்
சொல்லுவோம் சொல்லுவோம் குரல்காட்டி
வள்ளுவம் தமிழ்மாதின் உயிர்க்கூடு - எனக்
கல்லுவோம் கல்லுவோம் அதன்காட்சி
வள்ளுவம் தர்மத்தின் வடிவென்றே அதைப்
புல்லியே புல்லியே ந்ர்ம்வாழ்வோம்.

*(1968)*

# வேலை தேடும் வேலை

வேலைதேடி நான் ஓடுகின்றேன்
வேளை வரவில்லை வேலை செய்ய;
நாளை என்றவர் சொல்லிவிட்டார்
நானும் நம்பித் திரும்பிவிட்டேன்.
ஆளைப் பார்அதி அபசகுனம்
ஆன வேலைக்கு உதவாதென்றார்
தோளைப்பார் தோலாய்க் கிடக்குதப்பா
தோதில்லை இந்த வேலைக்கென்றார்
'மேலே' ஒன்றுமே இல்லையென்றார்
மேதாவி போலவர் சொல்லி நின்றார்
சாலை ஓரத்தில் திரியுமென்றார்
சாத்திரம் சொல்லிப் பாருமென்றார்
வேலை செய்கின்றார் உபதேசம்
வேஷம் போடுறார் மேதாவி
வேலை ஒன்றைநான் செய்கின்றேன்;
வேலை தேடுதல் அவ்வேலை.
நாளை என்றவர் சொல்லிவிட்டார்
நானும் நம்பித் திரும்பிவிட்டேன்.

*1968*
*கொழும்பு புனித பெனடிக்ற் கல்லூரி*
*தமிழ் இலக்கியமன்ற வெள்ளிவிழா மலர் 1971*

# இன்றைய ஈழத்தில் பாரதியார் இருந்தால்...

பாரதி என்றஎம் கவியவனின் - பாத்
தொகுப்பினில் உள்ளத்தைப் பதித்திருந்தேன்;
பேரதி சயம் கொண்டு திகைத்துவிட்டேன் - அவன்
பேசாத பொருளில்லை இப்புவியில்
சாரதி யாய் ஈழக் கவியுலகில் - அவன்
சார்ந் திருந்தாலெது நடக்குமென
நானதி நேரமாய்க் கனவுகண்டேன் - அக்
கனவினிட் பிறந்தது இக்கவிதை.

ஈழமெம் இணையற்ற பொன்னாடு - இதில்
பிறந்தநாம் பெற்றது பெரும்பேறு;
சூழநல் கடல்சூழ்ந்த இந்நாடே - நூலில்
சுவர்க்கமாய் போற்றிடும் உயர்வீடு;
ஆழமாய் நீர் கொண்ட அருவிகளும் - அருகில்
ஆர்த்தொலித் தோடிடும் ஆறுகளும்
வேழத்திற் கொப்புமை கூறுதற்கே - கூசும்
விண்ணினைத் தொட்டிடும் பெருவரையும்;

நீளமாய் பரந்த நெல் வயற்பரப்பும் - இடையில்
நித்திலம் போன்றபே ரடவிகளும்
வாழையாம் மாபலா நறுங்கரும்பும் -வானின்
ஒளியையே மறைதென்னஞ் சோலைகளும்
ஆலயம் பள்ளிகள் விகாரைகளும் - இன்றும்
அன்றைய கதைசொலும் சான்றுகளும்
வாழ்ந்திடில் ஈழத்தில் வாழ்ந்திடனும் - என்று
வாய்திறந் தோதுதே பாரும் கேளும்;

சீரிய சிங்களர் செந்தமிழர் - நல்ல
சிறப்புறு முஸ்லீம் பறங்கியரும்
நேரிய வாழ்க்கை முறையுடனே - அன்பு
நேயத்தால் ஈழத்தில் ஒன்றுபட்டே
காரியம் கடன்களை ஆற்ற வேண்டும் - ஈழம்
காவிய நாடாக மாறவேண்டும்;
கூரிய வேற்படைக் கன்னியவள் - மழலை
சிங்கள துடன்தமிழ் ஒலிக்க வேண்டும்.

உழுதுண்டு வாழ்ந்திடும் பெற்றியினால் - உலகில்
உன்னத நிலையினை நோக்கும் நாடு;

பழுதில்லா அறநெறி போற்றும் நாடு - நற்
பண்பினில் பழமையாய் இலங்கும் நாடு,
அலகில்லா அன்பதும் அருட்திறமும் - இவ்
அவனியில் தழைக்கவே ஓம்பும்நாடு;
அழகினால் மரகதம் என்று ஏத்தும் - ஓர்
அளவிலாப் பெருமையும் பெற்ற நாடு.

தொழில்வளம் பலவுண்டு ஈழமண்ணில் - அது
சோம்பேறி வாழ்வுக்கு ஏற்றதில்லை;
கலைவளம் கவிவளம் கழனிவளம் - கண்
பார்த்திடச் சொக்கிடும் அழகுவளம்
அலைவளம் உலைவளம் அருவிவளம் - இங்
குள்ளதாம் அத்தனை வளமதுவும்
மலையெனத் திரண்டொன்று பட்டுநிற்கும் - உயர்
மாண்பதும் கொண்டதெம் ஈழநாடு.

சிந்தனைச் செல்வர்கள் வாழும் நாடு - பெரும்
சிறப்புறு கொள்கைகள் ஓங்கும் நாடு;
நிந்தனை செய்வோரைப் போற்றா நாடு - நில
மானிய வழக்கங்கள் குலைவுகண்டு,
உய்ந்தவர் வாழ்ந்திடும் வீரநாடு - நன்
குழைப்போரைப் போற்றிடும் உத்தமத்தால்
வந்தனை செய்வோர்கள் வாழும் நாடு - வாழும்
நெறியினை வகுக்கவென் கனவுநாடு.

பெண்ணவள் விடுதலை பெற்றநாடு - பெரும்
பதவியில் அன்னவர் உறையும் நாடு;
கண்ணென அறிவினைக் கொள்ளும் நாடு - கவி
வாணரின் கற்பனைக் கின்ப ஏடு;

திண்திறல் தோள்வல ஆடவரும் - வண்ணச்
சிற்றிடை கொண்டநற் கன்னியரும்
தண்ணெனத் தழுவிடும் தென்றலிலே - நின்று
சல்லாபத் துடன்தெய்வக் காதல் செய்வார்.

இங்குவாழ் செந்தமிழ் பேசும்மக்கள் - ஈழத்
தித்தனை சிறப்புகள் இருந்தபோதும்
எங்கெங்கள் உரிமைகள் என்றே கேட்பார் - ஓர்
எல்லையில் சோகத்தில் இயங்குகின்றார்;
அங்கவர் கேட்பதில் உண்மையுண்டு - அவர்
இன்னுயிர் போல்மொழிக் கின்னலுண்டு;
பொங்குவார் அவரொரு காலமதில் - கொஞ்சம்
பொறுத்திரு பொறுத்திரு தமிழ்மகனே.

மனிதனுக் குரிமைகள் பிறப்பிலுண்டு - எம்
தமிழனே கொஞ்சம் நீ நின்று இங்கு,
உனிதயத்தில் கைவைத்துக் கொண்டு சொல்லு - உன்
இனத்தினில் சிறுபான்மை ஏதுவென்று?
இனியாதல் இதயத்தில் கனிவுவைத்து - உன்
இன்னுயிர் சோதர நண்பர்கட்கு
புனிதமாம் ஆலயம் பொதுவிடத்தில் - போகும்
பொதுவான உரிமையைக் கொடுத்துவிடு.

கனவினி லிருந்துதான் விழித்துக்கொண்டேன் -நல்ல
கனவிது என்றுநான் உவகைகொண்டேன்
நனவாகும் இது இங்கு உண்மையாக - நம்
பாரதி ஈழத்தில் இன்றிருந்தால்
கனலாகப் பாடுவான் இக்கருத்தில் - அவன்
கவிதையால் சமுதாயம் உணர்வு பெற்று
தினம் தினம் விழித்தெழும்; சிறுமை நீங்கும் - இச்
சிந்தனைக் கவிக்கனா நனவாய் மாறும்.

*1968*

# பேராதனை முருகன் ஆற்றுப்படை

மாயிரு ஞாலத்தில் மனிதனெனப் பிறந்து
மாண்புடைக் கல்வியில் மகிமைபலவும் பெற்று
சூழ்புவி தழைத்திட சுவர்க்கம தாக்கிட
காழென மாறிடும் கவின்பெறு மாணவ
பாழ்படும் வாழ்க்கையில் பயன்பல விளைந்திட
பல்கலை பயின்றிட பரவசம் கொண்டீங்கு
சொற்கலை வித்தகர் நற்கலை வல்லவர்
அற்புத மருத்துவ ஆய்கலை தேர்பவர்
பொற்புறும் பொறியியல் நுட்பங்கள் புரிபவர்
போற்றிடும் விஞ்ஞான புதுமைகள் அறிபவர்
கற்றிடும் நோக்கினில் கடவுளைக் கண்டிட

வெற்பினில் குடிகொளும் வேற்படை யாளனை
துற்றென அணுகியே தூய்தமிழ் பாடியே
கற்பூர ஒளியினில் கவலைகள் மாற்றுவீர்
கற்றிட வந்த என் கனவுகள் ஆயிரம்
கனவுகள் நனவாகாக் கதைகளும் ஆயிரம்
மனதினில் கிலேசங்கள் மகிழ்ச்சியே கிடையாது
மாயமாம் வாழ்க்கையின் மயக்கமோ மாளாது
ஆயமே வெறுத்தெனை அலட்சியம் செய்தது
இன்பமே இல்லாமல் இதயமே வெடித்தது.
துன்பந்தான் வாழ்க்கையாம் தூமனம் சொன்னது
துயரத்தால் வாடினேன் சுகந்தேடிப் பாடினேன்
ஆடிடும் மயிலினில் அமர்ந்திடும் வேலவா
அன்பர்தம் குறையினைப் போக்கிடும் தூயவா
மாயவன் மருகனாய் மன்பதை காப்பவா
மலர்விழி வள்ளியின் மனத்திடம் கொண்டவா
ஆய்கலை வித்தகா அறிவினைத் தருபவா
எழில்மிகு பேராதனை மலையினில் வதிபவா
சூழ்கலி நீக்கடா தூயருள் ஊட்டடா
நான்பெறும் இன்பத்தை நீர்பெறும் முறையினில்
அவன்பதி சேருமின் அவனருள் நாடுமின்
நாயகன் உறைந்திடும் அருமலைச் சூழலில்
மான்மயில் உலாவிடும் நன்மரச் சோலையும்
பாய்ந்திடும் அருவியும் பவித்திரம் பெற்றன.
பக்தர்கள் காலடி பட்டதோர் பான்மையால்
பாதைகள் பற்பல கிளைவிட்டுச் செல்லுமே
மாலையில் குயிலோசை மலையினில் முழங்கிடும்
மாந்தர்தம் இசையோடு மருங்கிணைந்து இனிக்குமே
ஆலையின் சங்கொலி அரமைந்தன் பூசையின்
ஆரம்ப ஒலியென ஆர்த்தெழுந் தொலிக்குமே
காலையும் மாலையும் இழைந்திடும் தென்றலில்

கானவர் மருகனின் கருணையும் மணக்குமே
குறிஞ்சியின் மலர்களும் குமரன்தன் பாதத்தை
கூடிடும் உவப்பினால் குதூகலம் கொள்ளுமே
கன்னியர் காதலும் காளையர் எண்ணமும்
கந்தனின் பாதத்தைப் பற்றிடும் முயற்சியாம்
சூரிய சந்திர சுடர்களின் இயக்கமும்
தூமணி போன்ற பொன் தாரகை மினுக்கமும்
கூரிய வேலனைக் கும்பிடும் தன்மையாம்
பாரிய பல்கலைக் கழகமும் பாலனைப்
பார்த்து நின்றேபல பணிகளைச் செய்யுதாம்
நேரிய வாழ்க்கையில் நெடுந்தூரம் கண்டிட
சீரிய மாணவ முருகனை நாடுமின்
சிந்தையில் அவனருட் கேண்மையை ஓடுமின்
நுந்தமக் கருளவே நுண்ணறி வானவன்
விந்தைகள் புரிந்துபல் வீணரை மாய்க்கிறான்
ஆறுபடை வீட்டுடன் அவனருள் மேவியே
பேராதனை வீட்டுக்கும் பெருமையைச் சேர்க்கிறான்
உயர்ந்திடும் மலையினில் உள்ளமும் உயர்பவன்
உயர்குடிச் சுற்றமாய் இருந்தருள் புரிகின்றான்
ஞானத்தில் கலந்திட நயந்திடும் மாணவ
நாயகன் பாதத்தைப் பற்றியே பாடுக
தூயனே முருகனே சூரரின் பகைவனே
மாயவன் மருகனே மன்பதை கரத்திடும்
வீரனே தீரனே விளங்குவேற் கரத்தோனே
தாயவள் போலாகி எம்மையும் கார்குகா
தந்தைக்குத் தந்தையாய் இருந்தருள் புரிகுகா
மாயத்து வலையினில் மயங்கிடும் வாழ்க்கையில்
ஆயமாய் மாறியே அருள்கவென் றோம்புக;
ஆயமாய் மாறுவான் அருந்துயர் போக்குவான்
சேயொளி மிக்கவன் ஏழிசை யானவன்
பேராதனைப் பதியினில் உறைந்திடும் முருகவன்.

*1968*
*(பிரகரம் ஞானச் சுடர் இதழ்)*

## 'நீண்ட மூச்சு'

காலை விடிந்தபின் மாலை வந்தது;
கணங்கள் யாவும் சுழன்று கழன்றது
ஏழை என்மனம் அழுது வடிந்தது
ஏங்கும் நெஞ்சினில் தொல்லை கனத்தது.
வாலைப் பருவத்து ஆசைக் கனவுகள்
வாழ்வில் தோற்றிய நீண்ட மூச்சுகள்
சோலை என்பது வாழ்வில் இல்லையோ
சோகந்தான் இவ்வாழ்வின் எச்சமோ?

மேகம் கவிந்ததோர் மாலைப் பொழுதினில்
மேற்குவானச் சிகப்புச் சுழிப்பினில்
பாகம் பெண்ணுரு ஆன நினைப்பினில்
பரிந்தணைந்து நாம் உலாவி வருகையில்
காகம் கூட்டமாய் கரைந்து பறந்தது.
கன்னி அதரங்கள் இனிமை பொழிந்தது.
தேகம் புல்லரிப்பில் மிதந்தது
தேய்ந்த மூச்சொன்று காற்றில் கலந்தது.

பாயும் அருவியின் பசும்புத் தரையினில்
பார்க்க முடியாத புதரின் மறைப்பினில்
உராயும் தென்றல் சுகந்தினணைப்பினில்
உரிமையோடு நீ அருகிலிருக்கையில்
மாயும் வாழ்க்கையின் மயக்கை மறந்து நாம்
மழலைபேசி மகிழ்வில் திளைத்ததை
ஆயும் போது நான் அழுகை கொள்கிறேன்.
அடக்க மற்றதோர் மூச்சில் நனைகின்றேன்;

வாழ்க்கை என்பது கனவின் தொகுதிகள்
வழிமுழுவதும் நீண்ட மூச்சுக்கள்
வாழ்க்கை என்பது நினைவின் சுழிப்புகள்
நிறைவேறாத மனத்தின் உளைச்சல்கள்
வாழ்க்கை என்பது உடலின் உணர்ச்சிகள்
வாய் வயிற்றின் இடையறா முயற்சிகள்
வாழ்க்கை என்பது சலிப்பின் சிதறல்கள்
முதலும் முடிவும் மூச்சின் முனங்கல்கள்.

| **1968** |
|---|
| *1. வீரகேசரி : 21.11.1968* |
| *2. கனடா 'செம்மண்' மலர் : 2013* |

# 'காதல் தத்துவம்'

ஊற்றின் சங்கமம் உத்தம நதியாம்;
நதியின் கலப்பு நந்திடும் கடலாம்;
காற்றின் அணைப்பு தண்ணிய சுகமாம்;
கவிதை உணர்வில் காவியப் பிறப்பாம்;
வாழ்வில் தனிமை உலகில் வேண்டாம்;
வாஞ்சை கவிந்த உணர்வில் ஒன்றாய்
தனிமை தனிமை தவிப்பு எனக்கு
சார்வோம் அன்பே இணையாய் இன்று;

மலை முகட்டைக் கொஞ்சும் மேகம்;
அலை அணைந் தணைந்தே துள்ளும்;
மலர் அசைந்து மற்றதைப் புல்லி
மகிழ்ந்து சிரிக்கும் மன்பதை வாழ்வில்,
நிலத்தைச் சேரத் துடிக்கும் கதிர்கள்
நீந்திக் கடலில் திளைக்கும் மதியும்;
விரைந்து வந்தே என்னை அணைத்தே
விரும்பித் தாராய் முத்தம் அன்பே!

***1969***
*ஷெல்லியின் Lovers Philosophy என்ற கவிதையைத் தழுவி எழுதப்பட்டது.*
*ஈழநாடு : 18.07.1970*

# வாழ்க்கை

முல்லைக் கொடியின் வெள்ளைப் பூவும்
முருக்க மரத்தின் சிவத்தப் பூவும்
எல்லை யற்ற வனப்பைக் காட்டி
எம்மைப் பார்த்துச் சிரித்து நிற்கும்.

பாலை நிலத்துப் பறவை இனமும்
பசுமை நிறைந்த குறிஞ்சிக் குருகும்
மாலைக் காலம் முல்லை மருத
மயக்கும் குருவின் குலமும் பாடும்.

வீதி யோரம் குடிசை யோடு
விண்ணை முட்டும் வீடு நிற்கும்
சாதி பார்க்கும் தடிய ரோடு
தாரா ளமும் நிறைந்து நிற்கும்

பாதிச் சேலை மனிதச் சீவன்
பட்டு டுக்கும் கோடி சீமான்
ஓடி யாடி உழைக்கும் கூட்டம்
ஓய்ந்து தின்று பிழைக்கும் கும்பல்

கடலும் நிலமும் இணைந்த உலகம்
வெயிலும் மழையும் புனைந்த உயிர்கள்
இருளும் ஒளியும் சுழலும் நாட்கள்
இன்பும் துன்பும் கலந்த வாழ்க்கை

எதிரும் புதிரும் கலந்த வாழ்வு
எங்கும் மோன மகிழ்ச்சிச் சேர்வு
உதிரும் பூக்கள் விரியும் மலர்கள்
உருளும் காலச் சகடம் வாழ்க்கை.

*30.06.1969*

*தமிழ் இளைஞன், யாழ் இலக்கிய நண்பர் கழக கவிதைத் தொகுப்பு*
*'தளிர்கள்' - 1970*

# 'அணுவில் ஓர் உலகம்'

அணுவில் ஓர் உலகம்
அசைந்து கொண்டே இருக்கின்றது;
அரும்பொரு ளாமிறைவன்
ஆடலெலாம் அது தானாம்.

நினைவில் ஒரு துடிப்பு
மிதந்து கொண்டே இருக்கின்றது;
நிர்மலனின் நெஞ்சமலர்
நீளியக்கம் அது தானாம்.

பாட்டில் ஒரு சுருதி
பரந்து கொண்டே இருக்கின்றது;
பாதமலர் தூக்கியவன்
பாசக்குர லோசை யதாம்.

ஒளியில் ஒரு மினுக்கு
ஒளிர்ந்து கொண்டே இருக்கின்றது,
ஒப்பில்லா ஆண்டவனின்
உலகளக்கும் விழி தானாம்.

காதல் களி மயக்கம்
காவிய மாய் இனிக்கின்றது,
கருணை பொழிபவனின்
கற்பனையே அது தானாம்.

அணுவில் ஓர் உலகம்
அசைந்து கொண்டே இருக்கின்றது.
அரும்பொரு ளாமிறைவன்
ஆடலெலாம் அது தானாம்.

*1970*
*யாழ் இலக்கிய நண்பர் கழக கவிதைத் தொகுப்பு*
*'தளிர்கள்' - 1970*

# கூத்து

இருண்ட பிரபஞ்ச
ஏகாந்தப் பெருவெளியில்
சலனத் திரள்கள்!
சலனத் திரள்கள்!!
உலகம் பலவாய்
உருப்பெற்று எழுந்தன;
உலகம் பலவாய்
உருப்பெற்று எழுந்தன.

கணத்தின் அசைவில்
காலச் சுழலில்
வானும் தீயும்
வளியும் புனலும்
வையத்து உயிர்களை
வழிப்படுத்தின;
வையத்து உயிர்களை
வளப்படுத்தின.

ஒன்றாய் இரண்டாய்
பெரிதாய் பலவாய்
உயிரோடு இணைந்த
உடல்கள் தோன்றின;
உடலோடு இணைந்த
உயிர்கள் தோன்றின.

உலகம் உயிரின்
இயக்கம் பெற்றது
உலகம் உயிரால்
உலக மானது;
உலகம் உயிரால்
வனப்பு மிக்கது;
உலகம் உயிரால்
உயிர்ப்பைப் பெற்றது
உலகே உயிராய்
உயிரே உலகாய்....

காலம் வெளியில்
உயிரின் கூத்து;
தோற்றம் இயக்கம்
மறைவு என்றாய்....
மறைவு தோற்றம்
இயக்கம் என்றாய்.....
காலம் வெளியில்
உயிரின் கூத்து!
காலம் வெளியில்
உயிரின் கூத்து.

*1970*
*இதழ் அக்கினி (1975)*
*"சித்தம் அழகியார் - 4" (கவிதை வாசிப்போம்)*

# பிரபஞ்ச சுருதி

பச்சை இலைக்குவியலிடை
காற்றின் சிற்றூதல் -
விக்கி விக்கி அழும் குழந்தை
எங்கோ வெகு தொலைவில்
அந்தரத்தில்
கத்தும் ஒரு காகம்
காரோடும் ஓசை

தொழிற்சாலைச் சங்கின் நீண்டொலிக்கும்
ரீ.... ங் .... கா ....ர....ம்
காதருகில்
மெதுவாய் மிக மெதுவாய்
நாணத்தின் கிசுகிசுப்பு
ஒலி எழுப்பும் சிறு சிரிப்பு
......... பேரமைதி ............
வளையலொலி
இன்பத்தின் முனங்கலொலி ··
ஆழ்துயிலின் மூச்சோசை.

*15.08.1974*

# 'வீர' வியட்னாமிற்கு கவிதாஞ்சலி.

கீழ் வானச் சிவப்பு;
நண் பகலில் வெப்பகோரம்;
மாலை கருமிருட்டு............ நாளொன்றின் மெல்லசைவு;
நாளொன்றின் மெல்லசைவு;

நாகரிகக் கோலமதில் 'நல்லதொரு வளர்ச்சி'
உதட்டில் புன்சிரிப்பு, உபதேசம், கலகலப்பு;
'வாழ்வின் வாழ்வாங்கு', நெறிபற்றித் தர்க்கங்கள்,
அறுசுவை உண்டி, அனுபோகம், நல்லதுயில்.

கீழ் வானச் சிவப்பு
பகல் முழுதும் நல்லமழை;
மாலை கருமிருட்டு நாளொன்றின் மெல்லசைவு.

மனுக்குலத்தின் மாண்பிற்காய் மாழும் ஒருகூட்டம்,
அதிகார வெறிபிடித்து அலையும் ஒருகூட்டம்,
பஞ்சைகளாய் பட்டினியால் மரிக்கும் ஒருகூட்டம்,
பஞ்சனையில் பாவைகளின் அணைப்பில் ஒருகூட்டம்,

நாட்கள் மெதுவாக அசையும் இயக்கத்தில்
காலம் கடும் விசையில் செல்கின்றது;
காலத்தின் குரல்கள் காற்றில் பரக்கின்றன....;

கற்பனையில்......
கட்டியாளும் எண்ணமதில்.....,
துப்பாக்கி, குண்டு, , பீரங்கிவெடிப் பலத்தில்...,
அசையாத நம்பிக்கை கொண்ட அமெரிக்கா
அஞ்சி விழிபிதுக்கும் அதிசயம் நிகழ்கின்றது.....,

சுற்றாடல் எங்கும் சுடுகாடாய்ப் போனாலும்,
பட்டாளம் படையாய்த் திரண்டொன்றாய் வந்தாலும்,
வானம், கடல்நிலத்தை வளைத்துப் பிடித்தாலும்,
வார்த்தையால் மயக்கும் ஜாலங்கள் செய்தாலும்

ஓயாத கரங்கள்.......;
துடிக்கும் திண்தோள்கள்......;
தாம்கொண்ட இலட்சியத்தில்
தளராத மனவுறுதி......;
வீரம் விளையும்
வியட்னாமின் புகழ்பாடி
வீரம் விளையும்
வியட்னாமின் விடுதலைக்காய்
வீரம் விளைக்கும்
விறல்வீரர்தம் கரங்கள்
ஓயாத கரங்கள்....;
துடிக்கும் திண்தோள்கள்...;
தாம்கொண்ட இலட்சியத்தில்
தளராத மனவுறுதி......;

வீரவியட்னாமே!
உன் வெற்றிக் கீதத்தை
கேட்கும் நாளும் கடுகி வருகிறது
அப்போதும்,
கீழ்வானம் சிவக்கும்
சிவப்புக் கொடி பறக்கும்;
மேல் வானம் சிவக்கும்;
மேதினியில் மானுடத்தின் மேன்மையெல்லாம் கிடைக்கும்.

*(1972ஆம் ஆண்டின் கொழும்பு கலை இலக்கிய நண்பர் கழகம் நடாத்திய 'வியட்னாம் கவிதாஞ்சலி' நிகழ்ச்சியில் இடம்பெற்ற கவிதை*

## ‘நெல்லு விளைந்ததடி’

நெல்லு விளைந்ததடி – பொன்
நெல்லு விளைந்ததடி;

காடு கழனியாய் காட்சி திரிந்ததும்
காவலர் நெஞ்சினில் மாட்சி மிகுந்ததும்
பாடு பட்டாடி உழைக்கும் உழவர்கள்
பாட்டாளி மக்களின் வாழ்வு வளம்பெற

நெல்லு விளைந்ததடி – பொன்
நெல்லு விளைந்ததடி;

பாடிச் சிலுசிலுத் தோடும் அருவிகள்,
பாவையர் கூந்தலின் வாசம் மணத்திட
ஓடிப் பரந்து நிலத்தினில் ஊறியே
ஓம்பிப் பயிரை வளர்க்கும் திறத்தினால்

நெல்லு விளைந்ததடி – பொன்
நெல்லு விளைந்ததடி;

ஆடி வருந்தென்றல் காற்றில் அசைந்துமே
ஆனந்த தாண்டவ மாகக் குழைந்துமே
சூடி மணிக்கதிர் தளும்பிச் சிலிர்த்துமே
சுந்தர மென்னகை சிந்துதல் போலவே

நெல்லு விளைந்ததடி - பொன்
நெல்லு விளைந்ததடி;

கூடிக் குருகினம் கீத மிசைத்திட
குடும்பமாய்த் திரண்டவை குலாவி மகிழ்ந்திட
தேடி மடவார்கள் கவணால் எறிந்திட
தேங்கும் குருகினம் சிதறிக் குரலெழ

நெல்லு விளைந்தடி - பொன்
நெல்லு விளைந்ததடி;

நாடி விலங்கினம் வயலை அடைந்திட
நாசமாய் போமென்று மாந்தர் புலம்பிட
ஓடி ஒழிக்கும் விலங்குகள் நடுங்கிட
ஓட்டும் மனிதரின் கவலை பறந்திட

நெல்லு விளைந்ததடி - பொன்
நெல்லு விளைந்ததடி;

ஆடவர் கரங்களின் குறையா உழைப்பினை
அரிவையர் மனமெனும் அங்குசக் கருவியால்
ஊடக மாகவே பெற்ற உயர்ச்சியால்
உய்ந்து வளர்ந்து உணவின் துணிகளாய்

நெல்லு விளைந்ததடி - பொன்
நெல்லு விளைந்ததடி;

பொன்னின் நிறக்கதிர் பார்க்கும் அவாவினால்
பொற்புடை ஆதவன் முகிற்றிரை விலக்கியே
மின்னின் ஒளியைப் பரப்பி மினுங்கினன்;
மிடியைப் போக்கிய மிக்க செருக்கினால்

நெல்லு விளைந்ததடி - பொன்
நெல்லு விளைந்ததடி;

சீறடிச் சிறுவரின் சிந்தை களித்தது;
தின்ன உணவு குவிந்து கிடைத்தது;
ஆறடி ஓரத்தில் அன்பு தழைத்தது;
அண்ணலின் அண்ணியின் ஆசை நிறைந்தது;

நெல்லு விளைந்ததடி - பொன்
நெல்லு விளைந்ததடி;

கோவிலில் பூசைகள் பொங்கல் நிகழ்த்தினர்
கோமகன் பாதத்தை இறைஞ்சி வழுத்தினர்
பாவினால் பரசவ உணர்ச்சியை ஊட்டியே
பாசத்தின் கீதங்கள் பாரில் ஒலித்திட

நெல்லு விளைந்ததடி - பொன்
நெல்லு விளைந்ததடி;

நாயகன் நெஞ்சினில் காதல் துளிர்விட
நாயகி ஆக்கைபுத் தணியால் ஒளிபெற
தாயவள் உள்ளத்தின் தணியா அன்புபோல்
சாந்தியில் பூவுல கெல்லாம் பொலிவுற

நெல்லு விளைந்ததடி - பொன்
நெல்லு விளைந்ததடி;

*19.04.1969*
*மல்லிகை ஆகஸ்ட் 1974*

# 'சிறுசுகளின் பிரகடனம்'

விலங்கிட வேண்டாம்
வீணாக எம்மை
வகுப்பறைச் சிறையில்
பூட்டிட வேண்டாம்

எங்கள் சிறுவீடு
அம்மாவும் அப்பாவும்
அன்பாய் அரவணைக்க
அக்கா அண்ணாவுடன்
அடித்தோடி விளையாட
சின்னப் பாப்பாவின்
பொக்கை வாய்சிரிப்பை
மறுபடியும் மறுபடியும்

பக்கத்தேயிருந்து பார்த்திருக்க
மாமா மயிர்க்கரத்தால்
பந்தாகத் தூக்கி பரவசமூட்டிவிட
பாட்டியின் பாயில்
பல நூறு கதைகேட்க

விலங்கிட வேண்டாம்
வீணாக எம்மை
வகுப்பறைச் சிறையில்
பூட்டிட வேண்டாம்.

நீல வானம்;
பஞ்சாய் திரண்டுவரும் முகிற்கூட்டம்
பாடிப் பறக்கும் குருவிக் குலங்கள்
வீசுங் காற்றில்
சலசலக்கும்
பச்சை படர்ந்த மர இலைகள்
குளிர் நிலா
கண் சிமிட்டும் தாரகைகள்
உதயத்து மஞ்சளில்
ஆயிரங் கரம்நீட்டும் தங்கச் சூரியன்
வடிவான பூக்கள்
வண்ணத்துப் பூச்சிகள்
வாலாட்டும் நாய்க்குட்டி
இவையே எம் தோழர்களாக....

விலங்கிட வேண்டாம்;
வீணாக எம்மை
வகுப்பறைச் சிறையில்
மாட்டிட வேண்டாம்.

*கட்டைவேலி யாக்கரு விநாயகர் வித்தியாலயப்*
*பொன்விழா மலர் - 1993*



.......இயற்கையின் எழிலை, இலக்கிய நயத்தை, சோகச்சுவையை, வாழ்க்கைத் தத்துவத்தை என்று பலவற்றையும் அவற்றிற்கேற்ற சந்தக்கவிதைகளாக்கித் தந்துள்ளார் குப்பிழான் ஐ. சண்முகன். நயப்பதற்கு மேலும் நிறைய உண்டு.....

...... 1968 இல் கவிஞர் கண்ட 'அழகு வாய்ந்த யாழ்ப்பாண'த்தில் ஒரு சுற்றுலா போய்ப்பாருங்கள். 'அழகும் அழகும் சேர்ந்ததொரு அழகு வாய்ந்தது யாழ்ப்பாணம்' என்று அவர் அந்தக் கவிதையை நிறைவு செய்கிறார். அந்த அழகை இரசிக்கும் போதில் 1998 காலப்பகுதியில் வாழ்ந்த ஓர் இளைஞரால் யாழ். குடாநாட்டைப் பார்த்து இப்படிப்பாடி மகிழ முடியாத துரதிஷ்டத்தின் நினைவும் கூடவே எழுந்து மனதை இடிக்கிறது.

ISBN 955765000-1

9 789557 650005

Harikanan, Jaffna.